# ஒளியூரில் ஓமகுண்டம்—(C.N.A)

Regd. No. M. 4642

போன் நெ. 15

# திராவிடநாடு

12—2—56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணா



மாணவர்களே,

தொழிலாளர்களே,

வியாபாரிகளே,

பொதுமக்களே

**பிப்ரவரி 20**

**பொது வேலை**

**நிறுத்த நாள்**

★

நாட்டின் நாடிகளே

**கண்டனக் குரல்**

**எழுப்புவீர்!**

★

# கேட்டீரா, சேதியை!

## புலிக்கு பசுவேலை

தாடி வைத்திருப்பவர்களைப் பயன்படுத்தப்போகிறாராம், இந்திய திட்டமந்திரி நந்தா. இந்திய உபகண்டத்தில் தாடி மீசைகளுடன் பல லட்சம் சாதுக்களும் சன்னியாசிகளும் இருக்கிறார்களல்லவா? அவர்களில் 10-லட்சம்பேரை அழைத்து நாட்டில் ஒழுக்கம் பரவும் உபதேசங்களைச் செய்து, மக்களைப் பண்படுத்துமாறு செய்யப்போகிறாராம், நந்தா! கழுத்தையறுத்த சாது, விஷம்கொடுத்த சாது, போலிச் சாமியார், பெண்களை ஏமாற்றிய சந்நியாசி, பொய் மருந்து கொடுக்கும் பாபா — இப்படி, எவ்வளவு செய்திகள் வருகின்றன சாதுக்களைப்பற்றி இது தெரியாதவரல்ல, நந்தா! என்றாலும், இவர்களைக்கொண்டு ஒழுக்கம் பரவும் உபதேசங்களை நமது மக்களிடம் பரப்பப்போகிறாராம்!! சிரிக்காதீர்கள், இந்த நந்தாதான், இந்திய துணைகண்டத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பிலிருப்பவர்.

## என்ன சொல்வது!

"ஐயோ! ஐயோ!!" என்று அலறுகிறார். ஆபத்து வந்துவிட்டதாம்! இந்திக்கு! அதுவும் இந்திய சர்க்காரால் இந்திக்கு ஆபத்துவந்துவிட்டதாம்!! இந்தி மொழியிலே "டைப்" அடிப்பதற்கென்று ஒரு மெஷின் தயாரித்திருக்கிறது டில்லி சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட ஒரு கமிட்டி. அது ஒரு மாபெரும் தவறு செய்துவிட்டதாம்! உலக முழுதும் பழக்கத்திலுள்ள 1, 2, 3, 4 என்பதுபோன்ற நம்பர்களை ஒப்புக்கொண்டுவிட்டதாம். "இது, இந்தி வளர்ச்சிக்குச் செய்யப்படும் மாபெரும் துரோகம். எண்கள் கூட, இந்தியிலேயே இருக்கவேண்டும்" என்று அலறுகிறார் முன்பு காங்கிரஸ் தலைவராயிருந்த புருஷோத்தமதாஸ் தாண்டன்! அவர்கள்போக்குஎப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

## சுயராஜ்யக் காட்சி!

துடிதுடித்து மடிந்தார்கள்— 13-வயது பாலகன் உயிர் துறந்தான் —மடமடவெனச் சாய்ந்தோர் தொகை 75-மருத்துவமனைகளில் கிடப்போர் ஏராளம், என்று இவ் வண்ணம் பம்பாய் நகரிலிருந்து கிடைத்த சேதிகள் கேட்டுக் கலங்கினோம் நாம்! நடப்பதென்ன காட்டாட்சியா, என்று கவலையுற்றனர் நல்லோர்! உலகுக்கு 'பஞ்சசீலம்' போதிக்கும் நேருவால், உள்நாட்டில் இன்னொருவர் கருத்தை ஏற்று நடக்க முடியவில்லையா, என்று எள்ளி நகையாடிற்று உலகம். இப்படிப்பட்ட கொடுமைகள், பம்பாயில் நடைபெற்றபோது, காங்கிரஸ் சர்க்கார் என்ன செய்ததாம் தெரியுமா? நகரின் ஒவ்வொரு பகுதிகளிலும் நின்றுகொண்டு வேட்டுச் சப்தம் எழுப்பிய போலீசாருக்கு தித்திப்புப் பலகாரம் செய்து கொண்டுபோய் அளித்ததாம்! சாதாரணமாக இப்படிக் காவல் வேலைகளிலீடுபட்டோருக்கு, பூரி, உருளைக் கிழங்கு, வாழைப்பழம் வழங்கப்படுவது வழக்கமாம். ஆனால், சுயராஜ்ய அரசுக்கு, ஆனந்தம் தாங்கமுடியவில்லை போலும் — சுட்டுக்கொண்டேயிருக்கும் போலீசாரைக் கண்டதும். அதனால், 'ஷீரா' என்று சொல்லப்படும் தித்திப்பு பலகாரத்தையும் 'ஸ்பெஷலாக' வினியோகம் செய்தனராம்! வீதிகளில் விழுகின்றது, பிணம்—விருந்து நடக்கிறது வேட்டுப்போடுபவர்களுக்கு. எவ்வளவு கொடூரமான மனம்!

★

## துள்ளி எழுந்திடடா!

[ க. ச. மாணிக்கம் ]

காட்டைக் கெடுத்துயர் மேட்டைப் பொடிசெய்து
கொள்ளை வளங் குவித்தோம்!—உறம்
உள்ள வரைவடித்தோம்!—பீர்
மேட்டிலும் தேவிகுளத்திலும் நம்மவர்
மிஞ்சிப் பாடு பட்டார்—எழில்
கொஞ்ச உயிர் கொடுத்தார்!

ஆழி அலையெனச் சூழக்குதித் தெழுந்(து)
ஆர்த்திடு சங்கமடா!—விம்மும்
மார்தட்டிப் பொங்கிடடா!—இருள்
போழ்ந்து உரிமைகள் சூழ்ந்திட வேஅறப்
போர் முகம் கண்டிடுவாய்!—தமிழ்
வீரனே, வென்றிடுவாய்!

கூறற்றுத் 'தட்சிணம்' கூறிடும் போக்கினைக்
காறி உமிழ்ந்திடுவாய்!—அதன்
வேரைப் பிடுங்கிடுவாய்!—துளி
சாறற்ற திட்டத்தைச் சீரற்ற நீதியைச்
சுட்டுப் பொசுக்கிடவே—முரசு
கொட்டி முழக்கிடுவாய்!

வேரில் புழுநிகர் 'ஆதிக்க' சூழ்ச்சியின்
விந்தை புரிந்ததடா'—புது
வேட்கை பிறந்ததடா!—அட,
ஆறிலும் சாவுண்டு; நூறிலும் சாவுண்டு;
ஆவி பிரிவதற்குள்—வீர
காவியம் தீட்டிடுவாய்!

வெள்ளமெனப் பகை கொள்ள வந்தாலுயிர்
வெல்லக் கட்டியோடா!—போரில்
வல்ல தமிழ் மகனே!—நெஞ்சை
அள்ளும் சுவைகமழ் தெள்ளு தமிழ்பாடி
உள்ளம் குளிர்ந்திடவே—தம்பி
துள்ளி எழுந்திடடா!

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 14 இதழ் 32 12—2—56

# ★ சுதந்திரோதயம் ★

"செண்பக நிறத்தினள், செய்ய மலர் வாசமுடையாள், செயமதுர வாக்கினள், என் சிந்தையைக் கவர்ந்தாள், இப்போது எங்குள்ளாள் தெரியுமோ? அதோ இருக்கும் சிறையில்! என் வீடு, குடிசையென்பதால், கோபுரம்போன்ற அச்சிறையிலிருக்கட்டுமே என்று விட்டுவைத்திருக்கிறேன்! அதற்காக, சிறையுடையானுக்கும், காணிக்கைப் பணம் கட்டி வருகிறேன்"—என்று கூறிடும் ஏமாளியைப்போல, பெற்ற சுதந்திரத்தை, வடவரிடம் அளித்துவிட்டு, அதனாலென்ன, இதுபோல அந்தஸ்து வருமா நமக்கு; ஏக இந்தியாவன்றோ பெரிது! எனக் கூறிடும் இங்குள்ள காமராஜர்களின் போக்கைக் கண்டு மனம் வேகும் நம்மை மகிழ்ச்சியிலாழ்த்துகிறது, சின்னஞ்சிறு பூபாகமான மலேயா, சீக்கிரம் விடுதலை பெறப்போகிறது எனும் செய்தி. வெள்ளைச் சீமான்களின் கொள்ளைப் பூமியாக இதுநாள்வரை கருதப்பட்ட அந்தச் சிறு பூபாகம், 1957 ஆகஸ்டு 31ந் தேதி முதல் புது வாழ்வு பெறப்போகிறது. இதுபற்றிய அதிகார பூர்வமான அறிக்கையை, "வொயிட் ஹால்" வெளியிட்டுவிட்டது.

சிறு தீபகற்பம், அது. எனினும், இத்தனை ஆண்டுகளாய் அடக்கி ஆண்டுவந்த வெள்ளைக்காரர்களிடமிருந்து விடுதலை பெறப்போகிறது, இந்த வெற்றிச் செய்தியை, இலண்டன் மாநகருக்குச் சென்றிருக்கும், மலேயா முதலமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மான், உலகுக்கு அறிவிக்கிறார்—ஆனந்தம அலைமோதும் விதமாக. "வெற்றி பெற்றுவிட்டோம். புதியதோர் சுதந்திர நாடு அரும்பிவிட்டது. இந்த இலட்சியத்துக்காகப் பாடுபட்ட எமது அறப்பணியினை, எதிர்காலச் சரிதாசிரியர்கள் பொன்னெழுத்துக்களால் தீட்டுவார்கள்" என்பதாக.

மலேயா, கிளையிலேயே பழுத்த கொய்யாக் கனி அல்ல, விடுதலை பெற்ற மறு நாளே, பறித்துத்தின்று அனைவரும் ஆனந்தக் களிப்பு பெற! முள்ளுக்குள்ளிருக்கும் கனிதான். மலேயா கூட்டமைப்பிலே, ஒன்பது சுல்தான்கள் இருக்கிறார்கள்—அவர்களோடு ஒரு முடிவுக்கு வரவேண்டும். அடுத்தபடி, கானகங்களை வீடுகளாக்கிக்கொண்டு, அரசியல் கிளர்ச்சிகளில், தோழர் சின்பெங் தலைமையில் ஈடுபட்டு வரும் கம்யூனிஸ்டுகளிருக்கிறார்கள்—அவர்களை, இன்முகம் காட்டியோ, துப்பாக்கி நீட்டி'யா அழைத்து அமைதிப்படுத்த வேண்டும். அதற்கு மேல், 'மைனாரிடி'களின் பிரச்சினையும் உளது. உள்ளத்தில் திறனும், உண்மையான செயலார்வமும் இருந்தால், இதையெல்லாம் சமாளித்து வெற்றி காண வழியுண்டு; ஏனெனில், இந்த வழிகளையெல்லாம் மறைந்திருந்த 'வெள்ளை நந்தி' விலகிவிட்டது. எத்தன் வசம் சிக்கிக்கிடந்த, எழிற்கன்னியை, பெற்றாகிவிட்டது—இனிமேல், குடித்தனம் நடத்த வேண்டிய பொறுப்புதானே!

மலேயாவின் ஓரமாக டேவிட் மார்ஷல் என்பாரை முதலமைச்சராகக்கொண்டு வாழும் சிங்கப்பூரின் விடுதலை, இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. மலேயா பெடரேஷனுக்கு, துங்கு தலைமையில் ஒரு சர்க்கார். சிங்கைத் தீவுக்கு, மார்ஷல் தலைமையில் ஒரு சர்க்கார். மலேயாவுக்கு விடுதலை வழங்குவதாக அறிவித்த பிரிட்டிஷ் அரசு, சிங்கப்பூரைப்பற்றிக் குறிப்பிடவில்லை. வருகிற ஏப்ரலில், மார்ஷல் இலண்டன் செல்ல இருக்கிறாராம்—அநேகமாக அப்போது சிங்கையும் விடுதலை பெறக்கூடும் என நம்புகிறோம். சிங்கபுரி சட்டசபையும் கடந்த ஒன்பதாம் தேதி, அந்த நம்பிக்கையை அறிவிக்கிறது உலகுக்கு.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பெருமைக்குரிய இடங்களெனக் கருதப்பட்ட, கீழ்திசைக்கோடி பூபாகங்கள், பூபாளம் எழுப்புகின்றன! மலேயா மகிழ்கிறது—சிங்கபுரி நம்பிக்கை தெரிவிக்கிறது. திரு இடத்துடன் ஒப்பிடும் போது, வளத்திலும் மண் வகையிலும் எவ்வளவோ சிறிய இடங்கள்தான். எனினும் அந்நியன் பிடியிலிருந்து அறுபடப் போகிறோம் எனும் ஆனந்தத்தால், சரிதத்தில் எமது சேவை. பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என துங்கு அறிவிக்கிறார்.

இவ்வண்ணம் அறிவிக்கும் வாய்ப்பு கிடைப்பது அரிது. அந்தப் பேறு பெற்ற அவரை வாழ்த்துகிறோம். அவரைப்போல, நாமும் ஆனந்தக் களிப்புடன், உலகுக்குச் செய்தி விடுக்கும் இன்பநாள் வரவேண்டும். எத்தர்கள்! அவர்கட்கு 'சலாம்' போடும் ஏமாளிகள்! ஆகியோரடங்கிய நமது தாய்த் திருநாட்டை, 'ஏக இந்தியா'க்காரர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும்; அந்நாள் மலர, அனைவரும் பாடுபடவேண்டும். துங்குவைப்போல, நமது வாழ்நாளிலேயே சுடர்முகம் தூக்கி, உலகுக்குச் செய்தி விடுக்க வேண்டும்.

மலேயாவில் மலரப்போகிறது, சுதந்திரோதயம்.

திராவிடத்தில்......?—கேள்விக் குறி, ஆனந்தக் குறியாகும் நாள் அதிக தூரத்திலில்லை என்றே தெரிகிறது, கடந்த சில மாதங்களாக 'ஏக இந்தியா' படுகிறபாட்டைக் காணுகிறபோது! ★

# மேற்கொண்டுள்ள மேலான பணி

**தம்பி,**

காஞ்சீபுரம், வாலாஜா, செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம், புதுவை, கடலூர், சேத்தியார்தோப்பு, அணைக்கரை, மாயவரம், குடந்தை, தஞ்சை, திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், மதுரை, திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, எட்டயாபுரம், தூத்துக்குடி, நெல்லை, அம்பாசமுத்திரம், விக்ரமசிங்கபுரம், தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோயில், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், உசிலம்பட்டி, வத்தலகுண்டு, ஒட்டன்சத்திரம், பழனி, உடுமலை, பொள்ளாச்சி, கோவை, திருப்பூர், ஈரோடு, பவானி, சேலம், தருமபுரி, திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குடியேற்றம், வேலூர், ஆற்காடு, இராணிப்பேட்டை, காவேரிப்பாக்கம், பெருமந்தூர், பூவிருந்தவல்லி,.........

இங்கே மோடார், மேலால் போக மறுக்கிறது! அங்கு, இதயத்து மொழியை விழி காட்ட, "இதுவோ நான் உம்மிடம் எதிர்பார்ப்பது?" என்று கேட்டு நிற்கும் துணைவியாரின் கணையால் தாக்குண்டு, நின்றுவிடுகிறார், நமது பொதுச்செயலாளர்; ஆனால் அதற்குள், ஆறு இரவுகள் ஓடிவிடுகின்றன—12ந் தேதி கிளம்பி 17ந் தேதி இரவுதான் சுற்றுப் பயணத்தை முடிக்க முடிகிறது — ஒரளவுக்கு.

ஆறு நாட்கள், ஓரிடத்தில் மணிக் கணக்கில் தங்காமல், இரவு நடுநிசிக்குப் படுத்துறங்கி, விடிய எழுந்து பயணம்துவக்கிநடத்தி, இவ்வளவு இடங்களை மட்டுமே காண முடிகிறது—விடுபட்டுள்ள இடங்களோ, இதுபோல் பன்மடங்கு—நாகையும் திருத்துறைப் பூண்டியும், மன்னார்குடியும் பிறவும், கரூரும் ,ஆத்தூரும், ராசிபுரம் நாமக்கல்லும், அருப்புக்கோட்டை காரைக்குடியும், சிதம்பரம் வேறு பல பாசறைகளையும் காணமுடியாது — விடுபட்ட சிற்றூர்களோ, ஏராளம்; எனினும், வேறேதும் செய்வதற்கில்லை; இதற்குமேல் அதிக நாட்கள் இந்தக் காரியத்துக்காகச் செலவிடுவதற்கில்லை—என்ற வருத்தம் உடனிருக்க, இவ்வளவேனும் காண வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள முடிகிறதே என்ற உற்சாகம் ஊக்கிவிட, நமது பொதுச்செயலாளர், தம்பி! அனைவரையும் கண்டு பேச வருகிறார். நான வரக்கூடும் என்று சென்ற கிழமை அறிவித்து இருந்தேன் — சென்னையில் நான் தங்கியிருந்து கவனிக்க வேண்டிய சில பணிகள் ஏற்பட்டுவிட்டன— சிரமம் பாராமல், நாவலர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார், — தோழர் என். வி. நடராசன் உடன் வருகிறார், தோழர் கண்ணதாசனும் வருகிறார்.

பிப்ரவரி 20-ல், கடைஅடைப்பு, வேலைநிறுத்தம், எவ்வளவு அமைதியான முறையில் நடைபெற்றுகவேண்டும் என்பதனை விளக்கிக் கூறிடவும், சர்வ கட்சிக் கூட்டணி சம்பந்தமான முயற்சிபற்றி எடுத்துரைக்கவும், வருகிறார்.

பொதுவேலைநிறுத்தம் என்பது சாமான்யமான காரியமல்ல.

ஜனநாயகம் நன்கு மதிக்கப்படும் நாடுகளில், ஆட்சியாளர்கள், இதனைத்தான் தமக்கு ஏற்பட்டுவிடக் கூடிய பெருத்த அவமானம் என்று எண்ணுவார்கள்.

காந்தியார், "யங் இந்தியா" பத்திரிகையில் தெளிவுபடுத்தி இருப்பதைப் போல, "ஆயிரம் பிரசங்கங்களைவிட இந்த அர்த்தால் பலனுள்ளது" அதிலும்; பிப்ரவரி-20, எந்த ஒரு கட்சியும் தனி உரிமை கொண்டாடும் காரியமாக இல்லை; பல்வேறு கட்சிகளும் தத்தமது சக்தியைக் கூட்டிக் காட்டிடும் மாபெரும்சம்பவமாகும்.

எனவேதான், நமது கழகத்தோழர்கள் துளியும் புகாருக்கு இடமற்ற முறையில், எவரும் கண்டு பாராட்டத்தக்க வகையில், நடந்துகாட்ட வேண்டும்.

இந்தப் பொறுப்புணர்ச்சியை, பொங்கி எழும் ஆர்வத்தால் உந்தப்பட்டிருக்கும் தோழர்கள், மறந்துவிடலாகாது என்பதற்காகவே பொதுச்செயலாளர் இந்த மின்னல் வேகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

தம்பி! காமராஜரும், பயணமாகி இருக்கிறார் — கடுங்குளிர் கொட்டும் அமிர்தசரசுக்கு.

இருவரும் போகும், திக்குகள் மட்டுமல்ல, வேறு வேறாக இருப்பது, இருவரின் நோக்கமும் வேறு வேறு!!

அமிர்தசரஸ் சென்றுள்ள காமராஜர், நீட்டிய இடத்தில் கையெழுத்திட்டுவிட்டு வரப்போகிறார்-உங்களைக் காண வருபவரோ, நீங்கள் காட்டிடும் உற்சாகத்தைக் கண்டு களித்துப் புதியதோர் நம்பிக்கை பெற்றுவரப் போகிறார்.

திரும்பி வந்தவுடன், காமராஜர், போலீஸ் மேலதிகாரிகளுடன் பேசக் கூடும்.

"பிப்ரவரி-20, என்ன நேரிடும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?"

"சர்வகட்சிக் கூட்டணியாக இருப்பதால், சற்று வெற்றிகரமாகவே, அர்த்தால் நடை



# பவனி வருகிறார் நேரு அங்கே!

பெறும் என்று எதிர்பார்க்கிறோம்''

''எந்த நிலைமையையும் சமாளிக்கத் தக்க ஏற்பாடுகள் உள்ளன அல்லவா?''

''ஆகா! தாராளமாக! தங்கள் உத்தரவைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்''

''ஜனங்கள் எப்படி இருக்கிறார்கள்?'

''வேலை நிறுத்த விஷயத்திலே அக்கரை காட்டுகிறார்கள் — ஆயிரக்கணக்கில் கூடுகிறார்கள் கூட்டங்களில்— உற்சாகம் காட்டுகிறார்கள்''

''அது சரி! அது சரி! ஒரு நாளைக்கு நேருவை அழைத்து வந்து கூட்டம் போட்டால் போகிறது. இவர்கள் இப்போது செய்யும் காரியம் ஒரு பிரமாதமா? அது கிடக்கட்டும் — நாம் என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்?''

''நாமா......தாங்கள் சொல்கிறபடி செய்யலாம்......முதலிலேயே, முக்கியமானவர்களைப் பிடித்துப் போட்டுவிடலாம்......''

''நாற்பது ஐம்பதாவது இருக்கும் போலிருக்கே......பிடிக்கப்படவேண்டியவர்கள்......''

''இருக்கும்...கமிட்டியில் 27பேர்...''

''கமிட்டியை அப்படியே...''

''அரெஸ்டு செய்துவிடலாம்...எல்லோருடைய விலாசமும் குறித்து வைத்திருக்கிறோம். அன்றாட நடமாட்டம் பற்றிக்கூட குறிப்பு எடுத்திருக்கிறோம், விநாடி தவறாமல் கண்காணித்துவர ஏற்பாடு இருக்கிறது.''

''அரெஸ்டுசெய்யலாம்...ஆனால்...''

''முன்பு தி. மு. க. மும்முனைப் போராட்டத்தின்போது, இதுபோலத்தான், அவர்கள் கூடி முன்னேற்பாடுகள் செய்வதற்குள், துளியும் அவர்கள் எதிர்பாராத நேரத்தில், தலைமை நிலயம் சென்று, சுற்றி வளைத்துக்கொண்டோம்; கமிட்டியை அப்படியே கொண்டுவந்துவிட்டோம்''

''ஆமா...மாம்...''

''ஏன்! ஏன்! ஏன் சிரிக்கிறீர்கள்?''

''சிரிப்பா! இது என்ன சிரிப்பு! அப்போது நானும் என் நண்பர்களும், இதைவிடப் பலமாகக் கை கொட்டிச் சிரித்தோம்......என்ன பைத்யக்காரத்தனம்! சீப்பை ஒளியவைத்துவிட்டால் கலியாணம் நின்று போகும்...இந்தக் கிழவர், இப்படி முக்கியமானவர்களை முன்னாலேயே சிறையில் போடுகிறாரே ...அந்த ஆத்திரம் போதுமே, மற்றவர்களுக்கு வீராவேசம்ஊட்ட! என்ன பைத்யக்காரத்தனமான போக்கு இது! என்று பேசிச் சிரித்தோம்...''

''அப்படியானால்...?''

''அதே பைத்யக்காரத்தனத்தை நானும் செய்வதா! வேறுமுறை கூறுங்களய்யா...''

''வேறு...! கலகம் குழப்பம் என்றால் முதலில் கண்ணீர்ப்புகை குண்டு வீசிவிட்டு, பிறகு, துப்பாக்கி...''

''பிறகு கீழே விழும் பிணத்தைப் பார்த்து மக்கள், என்னை வாழ்த்துவார்களா!......''

''அதுவும் கவனிக்க வேண்டியது தான்......''

''கடைகளை மூடவேண்டாம் என்று கூறி, போலீஸ் பாதுகாப்பு பலமாகக் கொடுத்து கடை அடைப்பை தோற்கடித்தால் என்ன? அதற்குப் போதுமான போலீஸ் இருக்கிறதல்லவா...?''

''மாமாங்கத்துக்குப் போவது போக, மிச்சமிருப்பதைக் கொண்டுதான் பார்க்க வேண்டும்...... ஆந்திரா, மலபார்... போலீசும் தருவிக்கலாம்... பட்டாளத்தைக்கூட பம்பாயில் தருவித்தார்கள்.''

*

திரும்பி வந்ததும் நமது பொதுச் செயலாளரோ,

எங்கும் எழுச்சி
எங்கணும் முழக்கம்
எவர் உள்ளத்திலும் உறுதி
சென்ற இடமெல்லாம் வீரம்
பரணி பாடி நிற்கின்றனர்
தியாகத்துக்குத் தயாராக உள்ளனர்

என்ற 'சேதி'யை, இங்கு அவர் வருகைக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் என்னிடமட்டுமல்ல, சர்வ கட்சிக் கூட்டணியில் உள்ள தலைவர்களிடமெல்லாம் கூறப் போகிறார் — ஆமாம் தம்பி! உன்னைக் கண்டால், எவர் உள்ளத்திலேதான், வீர உணர்ச்சியும் நம்பிக்கையும் ஊற்றெடுக்காது.

ஆர்வம், கொழுந்துவிட்டு எரிகிறது தம்பி, எங்கும்.

தமிழ் இனம், தன் இயல்பை இழந்துவிடவில்லை; வீழ்ச்சியுற்றது போல் காணப்படினும், எழுச்சி பெற நேரம் அதிகம் பிடிக்காது என்பதை எடுத்துக் காட்டவும் இடித்துக் காட்டவும் முடியும் தமிழகத்தால் என்பதை உணருகிறேன்.

**தயார்! தயார்!** என்ற பேரொலி கிளப்பிடும் ஆயிரமாயிரம் தோழர்களைக் காணும்போது, வீரம் எத்துணை இங்கு இருக்கிறது என்ற எண்ணம் தேனென இனிக்கிறது...ஒரு கணம்-எனினும், மறுகணமோ, இத்துணை வீர உணர்ச்சி வீறிட்டெழும் நிலையில் நாடு இருக்கும்போதே, எத்தனை அக்ரமத்தைச் செய்ய, அநீதியைப் புரியத் துணிந்துவிட்டனர், நேருசர்க்கார் என்பதை எண்ணும்போது, துக்கம் நெஞ்சினைத் துளைக்கிறது.

ஒட்டகத்தின் 'தகாரா' கொட்டுவோர் — ஓராயிரம் ஈராயிரம் என்ற அளவில், புதுச் சட்டை கிடைத்த மகிழ்ச்சியுடன் தொண்டர்கள், பூர்ண கும்பம் எடுப்போர், பொட்டிட்டு மகிழ்வோர், தட்டுத் தூக்குவோர், தானம் கொட்டுவோர் கட்டியங் கூறுவோர் கானம் பாடுவோர், விட்ட அம்பு பாய்வது போலாகி இட்ட பணியினைச் செய்து முடித்திடவல்லேன் என்று வீரம் பேசுவோர், வெட்டி வா என்றால் கட்டிவருவேனே நான்! என்று வீம்பு பேசி விருது தேடுவோர், ஆகிய அணிபணி புனைந்த படை புடை சூழ, நேரு பெருமகனார், தலைவர் பீடத்தில் அமர்த்தப்பட்டிருக்கும் தேபர் பராக்குக் கூற, அமிர்தசரசில் பவனி வருகிறார்-அவர் ஆணையை நிறைவேற்றித் தருவதற்கு, அதன் பயனாக அரசுக்கு இழுக்கு வரினும் மக்களுக்கு உரிமை பறி போயினும், ஜனநாயகத்துக்குக் குழிபறிக்கப்படினும் கவலையில்லை, அவருடைய புன்னகை நம்மைக் கவர்னராக்கக்கூடும், அவருடைய தயவு நம்மைக் கோடீஸ்வரனுக்கக் கூடும், அவர் 'தெரிசனம்' நமக்கு எத்தனையோ இலாபம் தரவல்லது, அதுபோதும், இந்த மக்கள் கிடக்கட்டும்! இதுகளுக்கென்ன! வரட்டுக் கூச்சலிடும்—சில நாட்கள்!! வீரம் பேசும்—சில வேளைகளில் காட்டவும் செய்யும்—துரத்தி அடித்தால் போகிறது—துப்பாக்கிக்கு முன் என்ன செய்யும் இந்தக் கும்பல்!! — என்று இறுமாந்து கூறிக்கொண்டு செல்கிறார்கள், முதலமைச்சர்கள், முடிச்சமைச்சர்கள் ஆகியோர்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே காந்தாரமும் கஜேசும், காமரூபமும் மாளவமும், கூர்ஜரமும் பிறவும் உருவாகாத நாட்களிலேயே, அயோத்தியும் அஸ்தினபுரமும், காசியும் அரித்துவாரமும் 'திவ்ய க்ஷேத்திரங்கள்'

# அவனி ஆண்டோர் துடிக்கிறோம் இங்கே!!

# சங்கம் அறிந்த சான்றோரே!

ஆகாததற்கு முன்பே, பூம்புகாரும் கொற்கை, தொண்டி, முசிறி, எனும் பல்வேறு துறைமுகங்கள் கொண்ட தாய் விளங்கியது எந்த நாடோ, எந்த நாட்டிலே முரசு மூன்று, தமிழ் மூன்றுவகை என்றும், தானை நால் வகை, போர்முறை பல்வேறு வகை, கருவிகள் பலப்பல, என்றும் வகுத்து வைக்கப்பட்டிருந்தனவோ எந்த நாட்டிலே நிலமே ஐவகையாக இயல்பும் எழிலும் பயனும் கருத்தில்கொண்டு வகுக்கப்பட்டு இருந்ததோ, எந்த நாட்டு முத்தும் பவழமும் பிறநாட்டுப் பேரரசர்கள் தமது காதலைப்பெற்ற கட்டழகியர்க்குக் காணிக்கையாக்கிக் களித்தனரோ, எந்த நாட்டுப் புலவர்கள் புவியாளுவோரையும் துச்சமென்றெண்ணி அறநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றனரோ, எந்த நாட்டிலே முகிலின் முழக்கமும் முழவின் ஒலியும், மின்னல் ஒளியும் கன்னல் சுவையும், ஆடலழகியரின் கடையிடையும் ஆற்றலரசர்களின் கட்டாரியும் கொல்லவும் வெல்லவும் பயன்பட்டனவோ, எங்கு,

நற்றிணை நல்ல குறுந்தொகை
ஐங்குறு நூறு, ஒத்த பதிற்றுப் பத்து
ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு
அகம் புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்றபடி, பேரிலக்கியங்கள், கற்றோர் ஈட்டிய கருவூலமாக உளதோ, அந்த நாடு, அதன் எல்லைகள் வெட்டப்பட்டு வேற்றாரால் கவரப்பட்டு, அதன் பண்பு பாழ்படும் வகையினதான மொழிக்கும் கலைக்கும் இடமளித்து விட்டு, இடர்ப்பட்டு, இழிநிலை பெற்று, இயல்பு கெட்டு, எழில்குலைந்து, கொற்றம் அழிந்து, கோலம் கலைந்து, மற்றையோர் கண்டு எள்ளி நகையாடத்தக்க விதத்தில் மானமழிந்து, ஈனர்க்குக் குற்றேவல் புரிந்து கிடக்கும் எடுபிடியாக்கப்படுகிறது! எட்டுத் திக்கும் ஒரு காலத்தில் புகழ்க் கொடி பட்டொளி வீசிப் பறந்திட்டதாம்! இன்றோ, திக்குத் தெரியாத காட்டிலே சிறகொடிந்த நிலையில், தத்தித் தத்திச் செல்லும் தத்தைபோலாகிக் கிடக்கிறது! முத்துப் பந்தலளித்து முழங்காற்படியிட்டுப் பணிந்தான் ஓர் மன்னன்! தந்தக் குவியல்களைக் காலடியில் கொட்டி, அரசர்க்கரசே! என்று அஞ்சலி செய்தான் மற்றோர் வேந்தன். படைகொடு வருவேன் என்று கூறினதும், திறை கொண்டு வந்தேன் என்று பதிலிறுத்தனர் மன்னர் பலர். காவிரிக் கரையிலே காதல் கீதம் பாடிய கட்டிளம் காளை, கட்கம் ஏந்திக் கங்கைக் கரையினரைப் போரிலே வென்று, அவர்தம் தேர்ச் சிலைச் சிலையினை, தமக்கு அதரத் தேனளித்து ஆட்கொண்ட ஆரணங்குகள் விளையாட வைத்திருந்த பொம்மைகளுக்கு அளித்தானும்.

தம்பி! தம்பி! ஏன் பிறந்தோம் இந்நாட்டில்! பிறந்திடினும், தொதவர் தொம்பரவர், போல் இருந்து தொலைத்திடக் கூடாதா! ஏனோ, நம்மை எல்லாம் தமிழர் என்ற இன உணர்வும், அதனாலாய பெருமையினையும் பெறுமாறு, நாவலரும் பாவலரும் செய்து விட்டனர். அதனாலன்றோ நமக்கு நமது நாட்டின் அந்நாள் ஏற்றம் தெரிகிறது; தெரிவதனாலன்றோ, இன்றுள்ள இழிநிலையும், இனி எதிர்காலம் எப்படியோ என்ற அச்சமும் பிடித்தாட்டுகிறது-அல்லற்படுகிறோம்-அழுது நிற்கிறோம்.

இவைபற்றி ஏதும் தெரியாத காரணத்தால், அதோ பார், அந்த 'அரும்பெருந் தலைவர்' தொல்லையற்றுத் துயரற்று, அமிர்தசரசில், ஆனந்தமாகக் காட்சிகளைக் கண்டு களித்தபடி, தமிழ் நாடு தனியாக இருத்தல் கூடாது என்கிறீர்களா? சரி! சரி! மெத்தச் சரி. தட்சிணப் பிரதேசமா? ஆஹா, அதனாலென்ன, ஏற்பாடு செய்வோம், கேரளமும் கருநாடகமும் தமிழகத்துடன் கூடி, ஓரரசு ஆகட்டும் என்று ஆணை பிறப்பிக்கிறீர்கள். சரி, அங்ஙனமே ஆகுக, என்று கூறிக்கொண்டு நிற்கிறார். இங்கே அலைகிறார் அலைகிறார், ஐயகோ, தமிழரே! பரணை எலாம் பழந்தமிழ்ச் சுவடிகள்; பாளையமெங்கணும் பாவாணர் மரபுகள், வயலெலாம் செந்நெல், வாவி எலாம் வாளை, நினைவெலாம் நேர்மையின் மீது, என்றெலாம் செப்பிடுவர் செந்தமிழ்க் காவலராம் பாவலர் பலர், இன்றோ, தமிழகம் தமிழர்க்கு இல்லையாம், தகுதியற்றோமோ, திறமை அற்றோமோ அறிந்தோமில்லை, மொழி வழி அரசு எனப் பல காலும் மொழிந்து வந்தனர், வாக்கினைத் தாமே மாய்த்திடும் வன்கணர்களாகி விட்டனர் ஆளவந்தோர், எனவே அரசு இனி, தமிழ் நாட்டுடன் அமையாது என்று அறைந்து விட்டனர்; பிற மொழியாளருடன் கூடி ஓர் அரசு நடாத்துவதே பெருமை அளிக்குமாம், சிறுமை ஒழிக்குமாம், பிணக்கு தீர்க்குமாம் பிளவு போக்குமாம், இங்ஙனம் ஏலாதனவெல்லாம் கூறி பொய்யுரையைத் துணிந்து கூறி பொலிவுள்ள தமிழகத்தை, களமாக்கத் துணிந்து விட்டனர்.

சங்கம் அறிந்த சான்றோரே! சிலம்பொலி கேட்டுச் சிந்தையில் தேன் பெய்தது என்றுகூறிக் களித்திடுவோரே, வீரம் செறிந்த தமிழ் நாடே! உன்னை வாழ்த்துகிறேன் என்று போற்றிடும் அன்பர்காள்! செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்ற பாரதி வாக்கினை மாய்த்திட ஓர் மாபாதகத் திட்டம் வகுத்துவிட்டனர் — வாய்க்கரிசியும் கைக்கிழங்கும் கிடைத்தால் போதுமென்றெண்ணி விட்ட ஆளவந்தார்கள், அத்தீய திட்டத்தினை நிறைவேற்றித்தர ஒப்பம் அளித்துவிட்டனராம். ஓங்கு புகழ் நம்முடையது என்று ஓராயிரம் புலவர் பெருமக்கள், நம் இதயம் விம்மும் அளவு பாடிவைத்துவிட்டனர்! ஒரு நொடியில் அதனை அழித்திடுவேன் என்று கூவுகிறார் நேரு, தாளம் கொட்டுகிறார் காமராசர். இதற்கென்ன செய்வது? கூறுமின்! கூறு முன். கூடிப் பணியாற்றிட வாரீர். பிப்ரவரி 20ல், முதல் முழக்கம். அன்று தமிழரின் பெருமூச்சு, டில்லி செங்கோட்டையில் வீற்றிருக்கும் பாறை மனம் கொண்டோருக்கும் இரக்கம் எழத்தக்கதாக வேண்டும். அதற்கான அழைப்பினை நேரிலேயே தந்துவிட்டுப் போகவே, இதோ நான் வந்துள்ளேன். உமது வீரத்தை, ஆர்வத்தை, மொழிப்பற்றை, நாட்டுப் பற்றை, பண்புகெடாமல் பணியாற்றும் திறத்தை நம்பி, பிறவேறு கட்சியினர் கூடியதோர் பேரவையில், சூள் உரைத்துவிட்டேன், அவர்களும் ஆமாம், உமது அணிவகுப்பின் ஆற்றலை நாங்கள் அறிவோம், நாடு அறியும் என்று கூறினர்.

நண்பர்களே, நாள் அதிகம் இல்லை. நாடெங்கணும் நடந்தாகவேண்டும், கடை அடைப்பும், பொதுவேலை நிறுத்தமும். எனவே, உடனே துவககுவீராக; வெற்றிக்கு வழி வகுத்துத் தருவீராக. தமிழகம், தன் வீரத்தை, உமது வெற்றியின்மூலம் விளக்கட்டும்—வீறுகொண்டெழுந்து இரத்தச் சேற்றிலே தள்ளப்பட்டாலும், தாயகத்துக்கு வர இருந்த தாழ்வினைத் தடுத்திடத் தவறினேன் இல்லை; இன்னுயிர்

(18-ம் பக்கம் பார்க்க)

# பங்கப்படவா பிறந்தோம் நாம்?



# ஒளியூரில்....

‘ரதிமதன’ நாடகம் நடத்தவேண்டுமானால், ராமப்பிரசாதனும் வாசமல்லிகாவும் அப்படியே, அரங்கம் ஏறி நின்றால் போதும், தத்ரூபமாக இருக்கும். எப்படித்தான் கிடைத்ததோ அந்த எழில், இருவருக்கும்! எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது அந்த ஜோடி—என்றான் சத்ருசங்காரன்.

“அமைந்திருக்கிறது என்று கூறாதே அமைய இருக்கிறது என்று சொல்” என்று திருத்தினான் காவியபூபதி.

“தடை என்ன இருக்கிறது, அவர்கள் தம்பதிகளாவதில்? ராமப்பிரசாதன் தகப்பனார் ரங்கராஜ பண்டிதர் தன் மகன், அழகிற சிறந்தவளை அடைவதற்கான முயற்சியில் ஈடுபட்டபோதே ஆசீர்வதித்தாரே—அழகான மங்கை என்பதற்காக மட்டுமல்ல, ஐஸ்வரியமும் ஏராளமாக இருக்கிறது என்ற காரணத்தால். வாசமல்லிகாவின் தகப்பனாருக்கு வாணிபத்திலே ஏராளமாக இலாபம் குவிகிறது. பல அரசாங்கங்களுக்குப் பண்டங்கள் வாங்கித் தரும் பொறுப்புக்கூட அவரிடம் தரப்பட்டு இருக்கிறது. மண்டலாதிபதிகள், தம்முடன் சரிசமமாக அல்லவா நடத்திவருகிறார்கள் பாஞ்சசன்ய பூபதியாரை; அவ்வளவு நல்லசெல்வாக்கு அவருக்கு” என்று விளக்கமளித்தான், சத்ருசங்காரன்.

அந்த இருவர் மட்டுமல்ல, மாளிகை பலவற்றிலேயும், நிகழ இருக்கும் இந்த நேர்த்தியான திருமணத்தைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

காதல் கைகூடுகிறது என்ற நிலை ஏற்படும்போது, அலாதியாகப் பிறந்திடும் பேரழகுடன் வாசமல்லிகா விளங்கினாள். எந்த அரசரும் அவளை அதுவரையில் சிறை எடுத்துச் செல்லாததற்குக் காரணம், அவள் அப்படிப்பட்ட அழகி அல்ல என்பதல்ல. அந்தக் காலம், ருக்மிணியைத் தூக்கிக் கொண்டோடிய கிருஷ்ணன் காலமல்ல; அந்த இடமும் உருமாறிக் கூடிடும் வித்தை அறிந்தவர் வாழும் விசித்திர உலகமுமல்ல.

வாசமல்லிகாவின் அழகு மணம், ராமப்பிரசாதனைக் கவருவதற்கு முன்பே, ரங்கராஜ பண்டிதரின் மனம் பூபதியாரிடம் இலயித்திருந்தது. பண்டிதருக்குப் போதுமான ‘தொழில்’ கிடைக்காத காலம் அது. அரச அவைகள் இருந்தன. ஆன்றோர் கூடிடும் அரங்குகளும் இருந்தன, மக்கள் மன்றங்களும் இருந்தன, எனினும், அங்கெல்லாம் முன்புபோலப் பண்டிதர்களுக்கு கெம்பீரக் குரலெழுப்பி, பகவானின் பல்வேறு திருவிளையாடல்களைக் குறித்துப் பாடியும் பேசியும், பக்திரசம் ஊட்டி; பரிசும் பவிஷும்பெறுவதற்கானவாய்ப்புக் கிடைப்பதில்லை. பூஜாமாடங்களிலே, எப்போதும்போல முரளீதரன் இருந்தான்; கோதண்டபாணி கோயிலில் ஆறுகால பூஜை, எப்போதும்போல நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது; துளசிமாடங்களைச் சுற்றிவந்து, தத்தம் நாயகர்கள், குறைவற்ற செல்வத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ அருள் புரியும் என்று வேண்டிக்கொண்டுதான் இருந்தார்கள்; ஆனால் எல்லாவற்றிலும், தரக் குறைவோ, ரசக்குறைவோ இருப்பதுபோலக் காணப்பட்டது. ஆலய மணி ஓசையிலேகூடக் கெம்பீரம் குறைந்து சோகம் ஒலித்தது.

பத்து நாள் போகட்டும், பிறகுதான் நிச்சயமாக எதையும் சொல்ல முடியும்; இப்போதைக்குப் பிராணபயம் உடனடியாக இல்லை, நாடியிலே கோளாறு இல்லை, ஆனால் நாளை மறுநாள் என்ன ஆகிறது என்று எப்படிக் கூற முடியும், எதற்கும் ஒரு பத்துநாள் கழியட்டும் — என்று மருத்துவர் கூறுவது கேட்ட இல்லத்தார், நோயாளியை எந்த நோக்குடன் பார்ப்பார்களோ, அந்தப் பான்மையிலேயே, ஆலயப் பூஜாரிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

“ஸ்வாமிகளே! எப்படி க்ஷேம இலாபங்கள்?’

“இருக்கிறேன், தங்கள் யோக க்ஷேமம் எப்படியோ?”

"எல்லாம் அவ்விடம் உள்ளது போலத்தான்"

"பகவத் கடாட்சம் எப்படியோ, பார்ப்போம்"

இவ்வளவுதான் அவர்களிடையே பேச்சு — அதுவும் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, வரட்சி நிறைந்த குரலில், மிரட்சி பொங்கிடும் கண்ணினராய்.

பொன்னொளி பரப்பிக்கொண்டிருந்த காலம் அது—எனவே புரட்டர்களும், புல்லர்களும் மனம் புழுங்கிப் போயினர். புனித மார்க்கம், புராதன மார்க்கம் என்று பல காலமாகப் பக்திபூர்வமாக எந்த மக்கள் நம்பிக்கொண்டிருந்தார்களோ, வந்தனை வழிபாடுகளை அன்புடனும் அக்கரையுடனும் செய்து வந்தனரோ, அவர்களே ஏதோ வேண்டா வெறுப்பாக ஈடுபாடு கொண்டிருந்த காலம்.

"மன்னா!" என்று மகரிஷிக் கோலத்திலிருப்பவன் அழைத்தவுடன் அடியற்ற நெடும்பனையெனக் கீழே வீழ்ந்து, அடிபணியும் மன்னர்களின் மனப்போக்கு மாறிவிட்டது; எந்த ஆசிரமத்தைச் சேர்ந்தவர்? என்ன கோரிவந்திருக்கிறீர்? இதற்கு முன்பு எந்த மண்டலத்தில் தங்கியிருந்தீர்? என்று 'விசாரணை' நடத்திய காலம்! இந்நிலையில், புராண இதிகாசங்களைக் கூறிக்கொண்டு, வாழ்க்கையில் மேம்பாடு பெற, எப்படி முடியும் ரங்கராஜ பண்டிதரால்! நெஞ்சு நெக்குருகக் கேட்டகாலம், கசிந்து கண்ணீர்மல்கிய காலம், கைகூப்பித் தொழுத நாட்கள், பக்திப் பரவசத்தால் மெய்மறந்துபோய் கைத்தாளம்கொட்டி ஆடிய காலம்— இவை போயேவிட்டன — கதை என்று கூடக் கூறத் தொடங்கிவிட்டனர் மக்கள். ஆண்டவனுடைய லீலா விநோதங்களை விஸ்தாரமாக எடுத்துச்சொல்லும்போது, சிலர், சிரிப்பதை அடக்கிக்கொள்கிறார்கள், வேறு சிலர் சிரிக்கவே செய்கிறார்கள். சிவலீலை விஷ்ணு மகாத்மீயம், கருட புராணம், அனுமத்பிரபாவம் ஆகியவை பற்றிக் கூறும்போது, முன்பெல்லாம், வெற்றிக் கொடிபிடித்து வீரர் முன்செல்ல, வெண்சாமரம் வீசிடும் வேல்விழியார் உடன் வர, கோலாகலமாகப் பவனிவரும் 'ராஜாதி ராஜன்' போல, 'சபை' செல்லுவார், பகவத்நாம சங்கீர்த்தனம் சொல்லுவார், மக்கள் இலயித்துக் கிடப்பார்கள்.

தொட்டார் வில்லினை
தொடுத்தார் அம்பு
விட்டார் எதிரே
அறுந்தது நாண்
ஒடிந்தது வில்
மலர்ந்தது இதயம்

என்று அவர் சீதாகலியாணத்தின் சிறப்பினைச் செப்பியபோது, மக்கள் எவ்வளவு ஆனந்த பரவசமடைவார்கள்! ஆடவரெல்லாம் ஸ்ரீராம ராவர், ஆரணங்குகளெல்லாம் சீதா தேவியாவர்! கோபால கிருஷ்ணனுடைய ரசலீலாக்களைக் கேட்டுப் புளகாங்கிதமடைந்தனர்! பத்தினிகள் பட்ட துயர் கேட்டு, விழி சிவந்திடும் அளவுக்குக் கதறுவர்! அப்படி இருந்துவந்த மக்களைக் கபிலவஸ்துவிலிருந்து கிளம்பிய புதுப் புயல், புத்த மார்க்கம், சிந்திக்க வைத்துவிட்டது. கதைகளிலே 'ரசம்' இருக்கிறது எனினும், பயன் உண்டோ? அவைகளைக் கேட்பதால்! அறிவுக்குத்தான் பொருந்தி வருகிறதா? நடைமுறைக்கு ஏற்றது என்று சொல்லத்தக்கதாகவாவது இருக்கிறதா? பல விஷயங்கள் வெளியே சொல்வதற்கே வெட்கப்பட வேண்டிய வகையிலல்லவா உள்ளன? என்று பேசிய மக்களைவிட, சிந்தித்துக்கொண்டிருந்த மக்களே அதிகம். இத்தகைய சந்தேகம் புகுந்து குடைந்து கொண்டிருந்த நிலையிலேயே அவர்கள் புனிதமானவை என்று நெடுங்காலமாக நம்பிக்கொண்டிருந்த முறையிலே, பற்றற்று நடந்து கொண்டிருந்தார்கள்.

சங்கு சக்ரதாரியாக விஷ்ணு பகவான் கோயிலில் நின்று கொண்டிருந்தார் எப்போதும்போல; வழக்கப்படி அவருக்கு ஆராதனைகள் நடைபெற்றுக்கொண்டு வந்தன; எதிரே நின்று எப்போதும்போல, கைகூப்பித் தொழுதனர் பக்தர்கள், ஆனால் அவர்கள உள்ளத்தில் இருந்த பக்தி, பிசுபிசுத்துக் கொண்டிருந்தது. சுடர்விட்டெரியும் திருவிளக்கு தரும் ஒளியில், 'கமலக் கண்கள்' தெரிந்தன, முன்பெல்லாம், விழியைத் திறந்து அவர் பார்ப்பது போன்றே ஒரு 'பிரமை' தோன்றும் பக்தர்களுக்கு — இப்போது அப்படித் தோன்றவில்லை.

என்ன கனிவு! எவ்வளவு கவர்ச்சி! அந்தக் கண்களில் அருள் ஒழுகிடக்கண்டேன், புளகாங்கிதம் கொண்டேன்! என்று உருகி உரைப்பர் — முன்பு. இப்போது மனு கொடுத்தவன் வந்து நிற்பதைக் கவனியாமல் குறிப்பேட்டினைப் புரட்டிக்கொண்டிருக்கும் கொத்தவால் முன்பு நின்றுகொண்டு, ஆர்ப்பாட்டத்துக்குக் குறைச்சலில்லை, அலுவலகத்தில் அழுலுக்குப் பஞ்சமில்லை, ஓயாது வேலைசெய்வது போலத்தான் காணப்படுகிறார், என்றாலும் என்ன பலன்? களவு போன என் பொருளைக் கண்டுபிடித்துத் தரும், திறமைமட்டும் இல்லை — இப்படி ஒரு கொத்தவால் இருக்கிறார், நாமும் இவரிடம் வந்துவந்து குறையைக் கூறிவிட்டுப் போகிறோம், என்று சலிப்புடன் எண்ணிக் கொள்ளும், கிராமத்துக் கிழவன் போலக் கடவுளின் சன்னதியில் நின்று கொண்டிருந்தனர். முன்பெல்லாம், தவறி, எங்கே தவறான, கேவலமான, ஆசாபாச உணர்ச்சிகள் ஆண்டவன் ஆலயத்திலே இருக்கும்போது உள்ளத்தில் தலை தூக்கிவிடுமோ, தேவனுடைய கோபத்துக்கு ஆளாக நேரிடுமோ என்று திகில்கொண்டு, "தேவ தேவா! எம்மைக் காத்தருளும், சத்யநெறியினின்றும் தவறி நடக்காத மன உறுதியைத் தாரும், தீய எண்ணங்கள் எம்மைத் தீண்டாதபடி தடுத்தாட்கொள்ளும், சகலபாவங்களையும் சம்ஹரிக்கும் தங்கள் திருப்பார்வையை, நாயினும் கடையராம் எம்மீது சிறிது செலுத்தும் பிரபோ! பித்துமனம் கொண்ட நான், செய்துள்ள பிழைகளைப் பொறுத்தருளும். சாசுவதமான இன்பம் பெறும் மார்க்கத்தை சர்வேஸ்வரா! எனக்குக் காட்டும்" என்று கேட்டு வந்த பக்தர்களிலே மிகப் பலருக்கு, ஆலயத்திலே காணப்படும் அலங்காரமும் ஆடம்பரமும், அர்ச்சகர்களாகி அரசோச்சும் பூசுரரின் பேராசையும் ஆதிக்க வெறியும், அவர்களைப்பற்றி ஆபாசம் நெளியும் கதைகளும், கண்ணிலும் கருத்திலும் உறுத்தின; இந்த இடத்தில், தூய்மையான கருத்து எங்ஙனம் துளிர்விடும்! வாடைக் காற்றடிக்கும் இடத்திலே மல்லிகையின் நறுமணம் தேடுகிறோம்—வீண் வேலை!! என்று தோன்றிற்று.

எவ்வளவு அழகான சிலைகள்! எத்துணை நேர்த்தியாகச் சமைத்திருக்கிறான் சிற்பி! அந்தக் கண்கள் கவிதைபாடுவது தெரிகிறதே! கன்னங்கள், கனிந்த பழம்போலல்லவா உள்ளன! அதரம் துடிப்பது போலவே தோற்றமளிக்கிறது. தன் கைவண்ணத்தை சற்றே

சரிந்த குழலின் பாரம் பின்னுக்கு இழுக்க, கனகப்பந்துகளின் கனம் முன்னுக்கு அழைக்க, எப்பக்கம் என் நிலை என்று துடிப்பதுபோல் இடை நெளிய, இந்தக் காட்சியிலே சொக்கி நிற்கும் என் நாதனைக் காணீரோ என்று கேட்பதுபோல், கண், பேச! ஆ ஹா! கல்லைக் கொண்டு இவ்வளவு அழகாக அளித்திருக்கிறானே, பேசும் பாவையர் கண்டு காமுறத் தகும் சிலை வடிவச் சிங்காரியை! ஸ்ரீதேவி என்றழைக்கட்டும், சிவகாமி என்றுரைக்கட்டும், மீனலோசனி, விசாலாட்சி, விரூபாட்சி, கமலலோசனி, என்று பெயர் எதுவேண்டுமானாலும் சொல்லட்டும், கதை எப்படி வேண்டுமானாலும் கட்டட்டும், கல்லிலே இந்த எழிலைக் காட்டினானே, அவனைத்தான் நான் தேடுகிறேன், புகழ்பாடிட, கொண்டாடி மகிழ்!!

இப்படி, 'சிலை'யிலே காணப்படும் சிற்பியின் கைத்திறனைப் புகழ்ந்தனர் சிலர்.

சீற்றம் பிறக்கவில்லை, ஆலயத்து மேலோருக்கு! அவர்கள் பக்திப் பரவசத்தால் கனிவு வழியத் தரிசிக்கிறார்கள் என்று எண்ணி, வேத மார்க்கம் தழைத்து நிற்கும், புத்தப் புயலிலே வீழ்ந்துபோகாது, சிறிதளவு தாழ்ந்துபோக நேரிடலாம், ஆனால் அடிபெயர்ந்திடாது —இதோ வைத்த கண் வாங்காது நிற்கிறார்களே, இவர்களெல்லாம் புராதன மார்க்கம் புதுமுறைக்காரர்களால் அழிக்கப்படுவதற்கு இடமளிப்பார்களா!! ஒருபோதும் இல்லை'— என்றெண்ணினர், மகிழ்ச்சிபெற்று, மலரால் மகேசனை அர்ச்சித்தனர், பிரசாதமளித்து மகிழ்வித்தனர் பிறரை.

தேவனைத் தரிசிக்கவந்தனர் பக்தர்கள் என்று அர்ச்சகர்கள் எண்ணிக்கொண்டனர், வந்தவர்களோ 'சிலை'யைக்கண்டு களித்திடும் கலா ரசிகர்கள்! பூஜை செய்கிறார்கள் என்று பூஜாரிக் கூட்டத்தினர் எண்ணிக்கொண்டனர், சிலையை ரசித்தவர்களோ, சிற்பியைப் புகழ்ந்துரைத்தனர். அருள்பெறும் இடம் என்று கூறி ஆலயத்துக்கு அழைத்தால், அழகொழுகும் கலைக் கூடம் இது என்று கூறிப் பாராட்டினர். ரசிகர்களைப் பக்தர்கள் என்று எண்ணிக்கொண்டனர்— ஏமாந்தனர்.

ஆரிய மார்க்கம் இங்ஙனம் அடித்தளம் தாக்குண்ட நிலையில் இருந்த காலத்தில் ரங்கராஜ பண்டிதருக்குத் தொழிலில், பொருளும் புகழும் மிகக் குறைந்த அளவுக்குத்தானே கிடைக்க முடியும்.

புத்த மடாலயம் சென்றுவிட்டவர்கள் — நிராசை—நிர்வாணம்—நிர்மலம் எனும் இலட்சிய சித்திக்கான முறைகளிலே ஈடுபட்டனர்—புத்த மடாலயம் சேராதவர்களும், புத்த மார்க்கத்தில் புகாமலும் புத்த மார்க்கப்பிரசாரமூலம் பெற்ற தெளிவினால், ஆரிய மார்க்கத்திலே உள்ள ஆபாசங்களை அறிந்துகொண்ட 'இந்துக்கள்' ரங்கராஜ பண்டிதரின் கதைகளைக் குறித்து அவரைக் கேட்ட கேள்விகள் அவருக்குக் கோபமூட்டின; கேள்விகள் தவறானவை என்பதால் அல்ல, பதில் கண்டறிவது கடினமாக இருந்தது . கடுங்கோபம் பிறந்தது பண்டிதருக்கு, எனினும், தனியே இருந்து, அதே கேள்விகளைப்பற்றிச் சிந்திக்கும்போது அவருக்குச் சிரிப்புக் கூட வரும்; ஆமாம்! அந்தப் போக்கிரிப் பயல்கள், சொல்வதைக் கேட்டுக் கேட்டு எனக்கே இப்போது சந்தேகம் பலமாகிக் கொண்டுதான் வருகிறது என்று தனக்குத்தானே கூறிக்கொள்வார்.

வாசமல்லிகாவுக்குப் பூட்டி அழகு பார்க்கவும், பெருமைப்படவும், தம்மிடம் பொன்னும் பொருளும் இல்லையே என்று பண்டிதர் ஏங்கிக் கிடந்தாரே தவிர, அந்த வனிதை இயற்கையிடமிருந்து எழிலைச் செல்வமாகக் குறைவின்றிப் பெற்றிருந்தாள்! ஆபரணச் சுமைதாங்கிகள் அரண்மனையில் அசைந்தாடிக்கிடந்தனர் — இந்த அழகு மயிலுக்கு அவை தேவையற்றன! இருக்கவேண்டிய இடமறியாததால், முத்துமாலையும் மோகராக் குவியலும், மரகதமும் பிறவும், சீமாட்டிகளிடம் சிறைப்பட்டுச் சீரழிந்தன! இந்தச் சிங்காரிக்கு அவை ஏன்? முத்தும், பவழமும் அளித்தனை, இயற்கையே! எனினும் அவைதமை அணிந்து மகிழவா செய்தனை. பேழையிலிட்டுப் பாதுகாத்து வரும் வேலையில் அல்லவா என்னை விட்டிருக்கிறாய்! பேழையிலுள்ளதை அவ்வப்போது சிலர், களவாடிச் செல்கிறார்கள்—'ஓ'வெனக் கூவி, அவர்களைப் பிடித்திடத் துரத்திச் சென்றாலும், என்னைத் தடுத்து நிறுத்துகிறாள், நிலமடந்தை, என்செய்வேன்! கொடுத்தும், கெடுத்தாய்! இருந்தும் பயனேதும் நான் பெற்றேனில்லை என்றல்லவா கடல் ஒலிக்கிறது, இயற்கையின் வஞ்சனையைக் கண்டு. இதோ, செம்பவளத்தை அதரமாக்கி, முத்துக்களை அழகான பற்களாக அமைத்து, பொன்னைப் பொடிசெய்து குழம்பாக்கி உடலெல்லாம் பூசி, தேயாத் திங்களாக முகத்தினைத் தீட்டி, நினைக்கும்போதெல்லாம், களிச்சாறு ஊற்றெடுக்கும் வகையும் தந்து, வாசமல்லிகாவைத் தன் செல்லப்பெண் ஆக்கிக்கொண்டானையே என்று கத்துங் கடலொலி கேட்கிறது.



ரங்கராஜ பண்டிதர்

அவனல்லவா அதை அறிந்திருக்கிறான்! அந்திநேரத்தில், ஆற்றோரத்தில், "எண்ணமதைக் கொள்ளையிட்ட வண்ணப்பூவே! எங்கு பெற்றாய் இத்தனை எழிலை எல்லாம்? என்று கேட்கிறான்! போதும் உமது பரிகாசம் என்று அவள் சிணுங்கினால், வண்ணப் பூமேனிக்கு இந்த வான்காற்று ஆகாது; பண்ணொத்த மொழியாளே! வாராய் இங்கு என்று அழைத்து, நீண்ட இருகையைப் போர்வையாக்கி, பிறை நெற்றிக்கு முத்தமெனும் பொட்டிட்டு, வெட்கத்தால் முகம் சிவக்க 'விடுங்கள்' என்றே வீணை மொழியிலே அவள் கூறும்போது, தலைசாய்த்துத் துயிலுதற்குத் தக்கதன்றோ, எந்தன் தடந்தோட்கள் என்றே மிக்கவும் கோபமது கொண்டான்போலே அவனும் கேட்க, மஞ்சமிதை வேறு அஞ்சுகமும் கொள்ளப் போமோ! என்று அவன் கூறி,

நெஞ்சம் நிறைந்துள்ள இன்பத் தேனை, அதரம் தன்னில் வைத்து, மகிழ்வூட்டி மகிழ்கின்றாளே, அங்கு அல்லவா தெரியும், பண்டிதர், தன் மகளுக்கு எழிலூட்டப் பொன்னையும் பொருளையும் தேடி அலைய வேண்டிய அவசியமே இல்லை எனும் பேருண்மை.

கொண்டலைத் தழுவிடும் மேகம், கூறுவதென்ன கோகிலமே!—என்று அவன் கேட்கிறான்; அவள் காதற் புலமையுடன், "தழுவிடச் சென்ற மேகமங்கை, பின்னர் அழுதிடும் காரணம் அறிவீரோ?" என்றல்லவா கேட்கிறாள்! செல்வம் நிரம்ப இருந்தால், வாசமல்லிகாவின் திருமணத்தை மிகச் சிறப்பாக, கோலாகலமாக நடத்தலாம், அதற்கான காலமா இது? இல்லையே என்று ஆயாசப்படுகிறாரே இந்தப் பண்டிதர். இதோ, வண்டுகள் யாழை மீட்ட, வரிக்குயில் பண்ணிசைக்க, அண்டையில் அருவி பாய்ந்து அழகாய் முழவொலிப்ப, கெண்டைகள் துள்ளியோடிக் கேளிக்கை நடத்திக்காட்ட வெண்முகில் கருத்துப் பன்னீர்த் துளிகளை வாரிவீச, வாசமல்லிகா—ராமப்பிரசாதன் கடிமணம், பல ஆயிரம் வராகன்களைக் கொட்டிச் செலவிட்டாலும் பெறமுடியாத அழகுடன் நடைபெறுகிறது, பண்டிதர் இதனை அறியாமல், பணமில்லை பணமில்லை, என்றெண்ணிப் பதைக்கிறார். பேதைக்கல்லவா, பணம் தேவை! இந்த ஆணழகன் தேடுவது, இந்த வடிவழகை, வண்ண மலரை, மண்ணகத்து மதியை, பொன் அவிர் மேனியாளை, புது வாழ்வை! வாசமல்லிகா கிடைக்கும்போது, அவன் அவளுடன் வந்துள்ள பேழைகள் எத்தனை என்று ஏன் கேட்கப்போகிறான்! அவன் உள்ளத்தை "முத்து வைத்த நற்பவழப் பெட்டி" கவர்ந்துவிட்டது!

"அங்கே சென்று, நட்சத்திரங்களை எல்லாம் எடுத்துப் பூப்பந்துகளாக்கி விளையாடினால் எப்படி இருக்கும்? — என்று குழந்தை போலக் கேட்பாள் மல்லிகா; குறும்புப் புன்னகையுடன், ராமப்பிரசாதன், "அங்கு நீ சென்றால், தேவலோகத்திலே பெரும் போரல்லவா, மூண்டுவிடும்?" என்பான்.

"அங்கு போர் எழ என்ன காரணமிருக்கிறது! இங்குதான், புத்தமார்க்கத்துக்கும் புராதன மார்க்கத்துக்கும் போர் மூண்டுகொண்டிருக்கிறது என்கிறார்கள். அங்கு போர் எழ என்ன காரணம்?" என்று அவள் கேட்க, "அன்பு மலரே! அமரர் உலகிலே நீ சென்றால், எனக்கா உனக்கா என்று அவர்களுக்குள் போட்டி கிளம்பி, பெரும் போர் மூண்டுவிடாதோ!" என்று அவன், குறும்பாகச் சொன்னான்.

"எனக்கென்ன அச்சம் அதனால்!" என்கிறாள் வாசா. பயந்து போகிறான் ராமப்பிரசாதன்; கோபமாகக்கூட இருக்கிறது. "அதென்ன மல்லிகா! அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்கிறான். "ஏன்! அமரர்கள், என்பொருட்டுப் போரிட்டுக்கொண்டால் எனக்கென்ன, அமரர்க்கரசனே குறுக்கிட்டாலும்புறமுதுகிட்டோடச் செய்து என்னை உம்மவளாக்கிக் கொள்ளும் என் ஆற்றலரசர் இருக்கும்போது எனக்கென்ன அச்சம்?" என்று அவள் கூறுவாள்; வாரி அணைத்துக்கொள்வான்; அவர்கள் காலடியில் மகதம், மாளவம், கூர்ஜரம், மராடம், வங்கம் ..........எல்லாம் உருண்டோடும், விண்ணகத்து மண்டிலங்களை எல்லாம்கூடக் கடந்து, அவர்கள், காதல் உலகு செல்வர்—கண்களைத் திறந்தாலோ, பசும் புற்றரையும், பழமுதிர் சோலையும், நீரூற்றும் இது, கலிங்கம் என்பதை நினைவிற்குக் கொண்டுவரும்.

பண்டிதர் பொருள் தேடிட எந்த மண்டிலம் சென்றும் பயனில்லை என்று அறிந்திருந்தார்; ஆனால் சம்பந்தியிடம் சற்றுக் கௌரவமாகத் தானே பேசிவைக்க வேண்டும்! அதனை வணிகர் அறியாமலில்லை அவர் பல மண்டிலங்கள் சென்று வருகிறார். எங்கும் மாறுதல்உருவாகிக் கொண்டிருக்கிறது. எல்லா மண்டிலங்களிலும் புத்த மதம் பரவி விடவில்லை; இந்து மார்க்கத்தைவிடாப்பிடியாகக் காப்பாற்றிக்கொண்டும், புத்த மார்க்கத்தினருக்குப் பல கொடுமைகள் இழைத்துக் கொண்டும் பல மண்டிலங்கள் இருந்தன என்றாலும், அங்கெல்லாம்கூட இந்து மார்க்கத்திலேயேகாலத்துக்குப் பயந்துமாறுதல்கள் செய்துவந்தனர். பேரிரைச்சலுடன் ஓடி வரும் ஆற்றைத்தாண்டி அக்கரை செல்லவேண்டுமானால், தட்டுமுட்டுச் சாமான்களையும் உடன் தூக்கிக்கொண்டா செல்ல முடியும்!

மகதம் இவ்வளவுக்கும் வழி செய்துவிட்டது என்று மறையவர்கள் அடிக்கடி ஆத்திரத்துடன் பேசுவர். அந்தப் பாபபூமியில்தான் இப்போது, கொடியைப் பறக்க விட்டுக்கொண்டுள்ளனர் புத்த மார்க்கத்தினர், அங்கு புத்த மார்க்கத்துக்கான படிப்பும் பயிற்சியும் பெற்று, பாரெங்கும் சென்று பௌத்தத்தைப் பரப்பும் பண்டிதர்களைத் தயாரிக்கிறார்கள்.

புத்த மார்க்கத்தின் புனிதத்தைப் புகட்டும் ஏடுகள் அங்கு மலை மலையாகக் குவிந்து கிடக்கின்றனவாம். ஒரு பெரிய பல்கலைக்கழகமே ஏற்படுத்திவிட்டிருக்கிறார்கள்.

இவ்விதமாகவெல்லாம், அந்த மண்டிலம்போய்வந்தவர்கள்வியந்து கூறுவர்; வைதீக மார்க்கக் காவலர்களுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கும்.

இவ்வளவுக்கும் ஆதரவு அளிக்கும், மகத நாட்டு மன்னன் ரௌரவாதி நரகமல்லவா போய்ச் சேருவான்?"

"அப்படி நாம் கூறுகிறோம்; நம்புகிறோம். அவர்கள் மோட்சம் நரகம்



வணிகர் பூபதியார்

என்ற பேச்சே ஆரியச் சூழ்ச்சி என்கிறார்களே"

"மேதாவிகளோ! யுகயுகமாக இருந்துவரும் ஐதீகத்தைப் பொய் யென்று கூறும் இவர்கள் வாய் புழுத்துப் போகும்—பார்—பார்"

"அந்த ஐதீகங்களெல்லாம் வீணுரை என்று விளக்கிடவே அங்கு, பேராசிரியர் பலர் பாடம் தருகிறார்களாம்"

"அதைக் கேட்க ஒரு கூட்டமும் சேருகிறதுபோலும்!"

"அவ்வளவு அலட்சியமாக நீர் கூறுகிறீர். அந்த **நலந்தா** பல்கலைக் கழகத்தில் 10,0000-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள்; ஆசிரியர்கள் 1500-க்கு மேல்!"

"பொய்! பொய்!! வீண்புரளி! பத்தாயிரம் பேர் அங்கு படிக்கிறார்களாம்—அது என்ன பாடசாலையா அல்லது பாடலீபுத்திரமா!"

"நீர் கேட்பதும் நியாயம்தான் பாடலீபுத்திரம் போன்ற ஒரு நகரமே அங்கு எழுப்பப்பட்டுத்தான் இருக்கிறது. அங்கு மாணவர்களும், ஆசிரியர்களும், தங்கியிருந்து, அறநெறிபற்றிய அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்"

இவ்விதமெல்லாம் கேள்விப்பட்டுக் கேள்விப்பட்டு ஆரிய மதக் காவலர்கள், மனம் புழுங்கிப்போயிருந்தனர்.

சீன யாத்ரீகனை யுவான் சாங் கூட, இந்த நலந்தா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, பௌத்த மார்க்கம் பற்றிய பாடம் கேட்டுப் பெற்றான் என்றால், ஆத்திரம் எப்படியிருந்திருக்கும், ஆரியக் குருமார்களுக்கு.

எவ்வளவு அற்புத அற்புதமான லீலாவிநோதங்கள் — பிரபாவங்கள் கொண்டதாக உள்ளன நமது புராண இதிகாசாதிகள்.

எத்துணை வாதத் திறமையுடன் கோர்க்கப்பட்டுள்ளன நமது சாஸ்திரங்கள்.

எத்தனை எத்தனை உட்பொருள்களை உள்ளடக்கியதாக நமது வேதங்கள் உள்ளன!

எவ்வளவுகாலமாக இந்தப் பாரத் வர்ஷத்தில் உள்ள ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் இந்து மார்க்கத்துக்கு ரட்சகர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். ஆரிய தாசராக இருப்பதைப் பெரும் பேறு என்று கருதும் சிரோமணிகளாக அல்லவா இருந்து வந்தனர்.

இவ்வளவு 'மகிமை' வாய்ந்த இந்து மார்க்கத்தைக் கற்றறிந்து கொள்ளவேண்டும் என்று ஒரு சீனனும் ஆவலைக் காட்டவில்லை, நேற்று முளைத்த புத்தமதத்தின், 'பாடம்' கற்றறிய சீனத்து யுவான் சாங் வருகிறானே! எவ்வளவு வேதனை தரும் செய்தி இது.

ஏதோ ஒரு மனக்குழப்பத்தால் மன்னன் மகனொருவன், தன் பொறுப்பை மறந்து, கடமையைத் துறந்து, அரச பதவியில் இருந்து 'சேவை' செய்ய மனமின்றி அங்கும் இங்கும் அலைந்து திரிந்து, கண்டேன் பேருண்மையை! காணீர் பேரொளியை! கேண்மின் பெருநெறியை! என்று கூறுகிறானும், இந்த மக்கள், நேற்றுவரை, கை கட்டி வாய்பொத்தி நம் எதிரே நின்று, காணிக்கை செலுத்தி அனுமதிபெற்று, நமது காலைக் கழுவி நீரைப்பருகி, கதிமோட்சம் கிடைத்தது என்று கிடந்துவந்தனர், கண்ணா மணிவண்ணா! என்று கைத்தாளமிட்டுக் கூத்தாடி நின்றனர், வேள்விக்கு உதவினர், வேத பாடசாலைகள் கட்டினர். சமாராதனைக்குச் சம்பிரமமாக ஏற்பாடு செய்தனர், சர்வம் பிரம்மமயம் ஜெகத் என்ற சாஸ்திரத்தை ஏற்றுக் கொண்டு சரணம்! சரணம்! என்று கூறிக்கிடந்தனர், அப்படிப்பட்டவர்கள், வேதம் வேண்டாம், பேதம் கூடாது, ஜாதி ஆகாது, ஆசையை அகற்று, என்று கூறிடும் புத்தனிடம் தங்கள் புத்தியைப் பறிகொடுத்துவிட்டுக்கிடக்கின்றனரே! இவர்களுக்கு வந்துற்ற கெடுமதிக்கு என்ன காரணம்?

வைதீக மார்க்கத்தினர் இது போலெல்லாம் கேட்டனர், கலகமூட்டினர்.

மாடங்களும், சிற்ப வேலைப்பாடமைந்த தூண்களைக் கொண்டு அழகுற விளங்கின. அல்லியும் பிறவும் பூத்து அழகினைத் தேக்கி வைத்துக்கொண்டிருந்த அலங்காரக் குளங்கள், அணியாக அமைந்திருந்தன. ஒவ்வோர் துறைக்கும் தனித்தனிக் கட்டிடம் —ஒன்பது அடுக்கு மாடி ஒன்று ஓங்கி நின்றுகொண்டிருந்தது, வளரும் புத்த மார்க்கத்தின் எழிலை விளக்குவதுபோல. இவ்வளவு சிறப்புடன் விளங்கிய நலந்தாவின் வளர்ச்சிக்காக மகதநாட்டு மாமன்னன் மானியமாக 200 கிராமங்கள் தந்திருந்தான். வங்கநாட்டு வேந்தனும் அதுபோன்றே மானியம் வழங்கினான்.

நலந்தாவில், புனித ஏடுகளைக் குருட்டுப் பாடமாகக்கொண்டு, பாமரரை மிரட்டுவதற்காக அவைகளை உரத்த குரலிலே உச்சரிக்கும் புரோகிதர்கள் தயாரிக்கப்படவில்லை — ஆய்வுரையாளர்கள் — அறநெறி பரப்புவோர் — அன்பு போதனை புரிவோர் ஆகியோர் பயிற்சிபெற்று வந்தனர். ஜாதி பேதம் அறவே நீக்கப்பட்டது; பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெறுவதற்கேற்ற பக்குவம் உளதா என்று மட்டுமே பரீட்சை நடத்தினர் — குலம் என்ன, கோத்திரம் யாது? சிற்றரசனா, சீமான் மகனா? பேழையுடையானா, ஏழையா! என்பதல்ல, அங்கு எடைபோட உதவிய படிக்கற்கள்! கற்றறிவாளனா, பற்றினை நீக்கிக்கொள்ளும் உளத் திண்மை உடையவனா, நற்பண்புகளின் கருப்பொருள் அவனிடம் உளதா இவைகளைக் கண்டறிந்தே துவார பண்டிதர்கள், மாணவர்களைச் சேர்த்துக்கொண்டனர்

இந்த மாபாவிகளின் கோட்டம், மண்மேடாகாதா! மகேசா! திரிபுரங்களையும், ஒரு நொடியில், ஒரு சிறு பொறியினால் சாம்பலாக்கிய சதாசிவமல்லவா, நீர்! திரிசூலி, நீ நினைத்தால் போதாதா இந்தத் தீயர்களைத் தீக்கிரையாக்க! மராமரம் துளைத்தவனே! ஜானகீ ராமா! அம்பொன்று எய்தால் போதுமே இந்த அசுரக் கூட்டத்தினை அடியோடு அழித்திட! என்று திருவுள்ளம் இரங்குமோ? திருவருள் பாலிப்பது எந்நாளோ? என்று மனம் புழுங்கிய, மறையவர் கூட்டம், மாரடித்து அழுதவண்ணமிருந்தது! நலந்தாவின் புகழோ ஆந்தையின் அலறலுக்கும், கோட்டானின் கதறலுக்கும், சட்டை செய்யாது, தண்ணொளி வீசிடும் வெண்ணிலவாகத் திகழ்ந்தது.

*

**ரங்கராஜ பண்டிதரிடம்,** அவருடைய 'பால்ய சினேகிதர்' பராசரதாசர் வந்தார்—பார்த்து நீண்ட காலமாகிவிட்டிருந்தது மட்டுமல்ல — பராசரதாசர், பராசரஸ்வாமியாகி விட்டிருந்தார் — ரிஷிக்கோலத்தில்! நாட்டின் நிலைமைகளை எல்லாம் எடுத்துப் பேசிக்கொண்டு வந்தனர் — இருவரும் — பராசரஸ்வாமிகள் சொன்னார்—பைத்யக்காரா! முன்பு போல நலந்தாவில் அந்தணசகாலர்கள் மட்டுமே அங்கு கொட்டமடித்துக்கொண்டில்லை. ஆரிய மார்க்கத்தினருக்கும் மெத்தச் சிரமப்

பட்டு இடம் பெற்றுகிவிட்டது. இப்போது, மாற்றுனின் கோட்டைக்குள்ளேயே நமது படை இருக்கிறது! ரங்கராஜா! எந்தநேரத்தில், எந்த முறையில் இதைச்சாதிப்பது என்பதைக் கண்டறிவதே என் வேலை. நலந்தாவில் வேத வகுப்புகள் நடத்தும் பொறுப்பு எனக்கு—அடிக்கடி விவாதங்கள் சச்சரவு—அமளி—ஆமாம்—இப்போது புத்த சாதுக்கள்பாடு திண்டாட்டம்தான்! கை கலப்பு என்று வந்துவிட்டால், நம்முடைய ஆசாமிகளுடைய திறமைதான் மேலோங்கி நிற்கிறது ......"

"அதெப்படி ஸ்வாமிகளே?"

"அது எப்படியா? அசடன் கேட்கவேண்டிய கேள்வியை இராமாயணம், மகாபாரதம் அனைத்தும் அறிந்த நீ கேட்கிறுயே! அங்கு ஆரியமதம் பயிலும் மாணவர்களெல்லாம், உண்மையிலேயே மாணவர்கள்தாஞ...ஐம்பது ஆட்களை எதிர்த்தடிக்கும் வல்லமை சாலிகள் இருக்கிருர்கள்—கையில் ஓலைச்சுவடி இருக்கும் பகலில்; இரவு நேரங்களில் கட்டாரி! ஆமாம் கூரிய கட்டாரி! ஆரிய போதனைக்குச் செவி சாய்க்க மறுக்கும் சண்டாளர்களின் மார்பிலே, கட்டாரி பாயும்—பிறகு முதலைகள்!! ரங்கராஜா நிர்மூலமாக்குவதற்கானசகல யுத்த சன்னத்தமும் செய்தாகி விட்டது..."

இருவரின் பேச்சைக் குறுக்கே தடுக்கும் நிலையில் அங்கு பூபதியார் வந்தார். "ஆரிய சிரேஷ்டரே! இவர் பாஞ்சசன்ய பூபதியார், என் நண்பர்; என் மகள் வாசமல்லிகாவை, இவர் திருக்குமாரன் ராமப்பிரசாதனுக்கு 'பாணிக்கிரகணம்' செய்ய ஏற்பாடாகி இருக்கிறது" என்று பண்டிதர் சொன்னுர்; ஒரு கணம், முகம் கருத்தது பராசரஸ்வாமிகளுக்கு, மறுகணம் ஓர் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, "மெத்தச் சந்தோஷம்! வணிகரோ?" என்று கேட்டார். "ஆமாம் ......மண்டலம் பலவற்றிலே தொடர்பு......நலந்தாவுக்குக் கூட, பண்டகசாலைக்குத் தேவையான பொருள்களை இவர் முலமதான் பெறுகிருர்கள்......" என்ருர் பண்டிதர்.

"அதுதான் ஆர்யதர்மம்! நலந்தாவில் உள்ள நீசர்கள், நமது மதத்தை அழித்தொழிப்பவராக இருந்தாலும், அவர்கட்கு உதவி செய்வதுதான் ஆரிய தர்மம்......" என்ருர் பராசரஸ்வாமிகள்.

"உண்மைதான், மேலும், நலந்தாவில் உள்ளவர்கள், நீசர்களுமல்ல, நான் இப்போது, இது விஷயமாகவே பண்டிதருடன் பேச வந்தேன். என் மனம், நலந்தாவில் இலயித்து விட்டது. 'சொத்தில் பெரும் பகுதியை நலந்தாவுக்கே மானியமாக்கிவிட்டு குழந்தை வாசமல்லிகாவின் திருமணத்தையும் விரைவிலேமுடித்து விட்டு நலந்தாவுக்கே சென்று தங்கி ஊழியம் செய்து, வாழ விரும்புகிறேன். குழந்தை என்னைப் பிரிய மனமின்றிச் சங்கடப்படுகிறது. என்றாலும், பெரியவர், பண்டிதர் இருக்கிருர் என்று தைரியம் கூறினேன்......" என்ருர். பண்டிதரின் முகம் பயங்கரமாக மாறிடலாயிற்று, சிரமப்பட்டுச் சமாளித்துக்கொண்டார்.



பராசர ஸ்வாமிகள்

"பூபதியாரே! சொத்து முழுவதையும் நீர், தானமாகக் கொடுத்துவிட்டு, வாசமல்லிகாவை வெறுங்கையோடு என் இல்லம் அனுப்பினுலும், நான் கவலை கொள்ளமாட்டேன். ஆனல், தாங்கள், நலந்தா சென்று தங்குவது என்ருல், அது தாங்கள் பாஷாண்டி மதத்தில் வீழ்ந்துவிட்டதுபோலத் தோன்றும் — அந்தக் களங்கம், எனக்குள்ள புகழ், என் குடும்பத்தின் கீர்த்தி, இவைகளைக்கெடுத்து விடும்...' என்ருர்.

"ரங்கராஜா! என்ன அவசரமான முடிவுக்கு வருகிருய்! பூபதியார் நலந்தா சென்று ஊழியம் செய்வதாகச் சொன்னுரே தவிர, புத்த மார்க்கம் புகுந்துவிடுவதாகவா கூறினுர். அங்குதான் இப்போது ஆரிய மார்க்கமும் இருக்கிறதே—சேவை செய்வது என்ருல், சகலமும் உணர்ந்த பூபதியார், ஆரிய சேவை செய்கிருர் என்பதுதானே பொருள். இப்போது, யாகம்கூட அங்கு நடத்தப்பட்டு வருகிறது. பூபதியார் போன்றவர்கள், ஆரியரின் புனித கைங்கரியத்துக்குத் தம்மாலான பேருதவி புரிந்துதான் வருகிருர்கள்" என்று பராசர ஸ்வாமிகள், சாகசமாகப் பேசினுர்; பூபதியாரோ, "மன்னிக்கவேண்டும், நான் புத்தமார்க்கத்திடம் பற்றுக் கொண்டுவிட்டேன்" என்ருர்.

"அப்படியானல், திருமணம்?" என்று ஆத்திரமாகக் கேட்டார் பண்டிதர்.

"விரைவில் நடத்திவிட்டுத்தான் நான் நலந்தா செல்வதாக உத்தேசம்"

"திருமணத்துக்குச் சம்மதிக்க மாட்டான், என் மகன்—அவன் மகா உத்தமன்—நமது பூர்வீக மதத்தில் நிரம்பப் பற்றுகொண்டவன்..."

"வாசமல்லிகாவை அல்லவா அவன் திருமணம் செய்துகொள் எப்போவது — என் நிலை பற்றிக் கவலை என்ன?"

பண்டிதரை, ஸ்வாமிகள் அதிகம் பேச இடமளிக்கவில்லை.

தீர்க்காலோசனைக்குக் காலம் கொடு, பூபதியாரே! திடீரென்று தாக்காதீர்—என்று கூறி அனுப்பி விட்டார்.

*

**நலந்தா** பிரச்சினை நந்தவனத்திலே, புயலேயும் புனலேயும், கனலேயும் கிளப்பிவிட்டது.

செல்வம் போய்விடுகிறதே என்பதுதான், தங்கள் தகப்பனாரின் கோபம், வருத்தம், வேறென்ன? என் அப்பா புத்த சமயத்தில் சேர்ந்தால் இவருக்கு என்னவாம்! இவரையும் தங்களேயுமா, சேரச் சொல்கிறார் என் தகப்பனார். அவருடைய மனச்சாந்திக்கான மார்க்கத்தை அவர் தேடிக்கொள்கிறார் என்று வாசமல்லிகா வாதாட, "செல்வச் செருக்கு, உன்னேவிட்டு எப்படிப்போகும், மல்லிகா! கேவலம் சொத்துப் போய்விடுகிறதே, என்று என் தகப்பனார் பதைப்பதைக் கருதுகிறாய் — செல்வச் செருக்கல்லவா அதற்குக்காரணம். அனாதிகாலந்தொட்டு இருந்து வரும், நமது மார்க்கத்தை இழித்தும் பழித்தும் பேசுபவருடன் எப்படிநாங்கள் உறவுகொள்ள முடியும்" என்று பேசுவான் பிரசாதன். கொதிப்பான பேச்சு — கோபமான பிரிவுகள் — இப்படி ஆகிவிட்டது நிலைமை.

கண்டதும் ஏற்படும் கனிவு— காதற் பேச்சிலே இருக்கும் கவர்ச்சி —இவை, குறையத் தலைப்பட்டன; மகிழ்ச்சி மங்கலாயிற்று,

"நேற்று முளைத்த ஒரு காளானுக்காக, நமது பூர்வீகப் பாரிஜாதத்தைகாலால்மிதித்துதுவைப்பவரை, அவர் யாராக இருப்பினும், நான் துச்சமாகத்தான்மதிப்பேன்."

"அவரவரின் மனச்சாட்சிக்குத் தக்கபடி மார்க்க விஷயம் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை மதிக்காதவர்களை நான் தூசிக்குச் சமமாகக்கூடக்கொள்ளமாட்டேன்"

"நாவை அடக்கிப் பேசு! தந்தையைக், கேவலமாகப் பேசுவதைக் கேட்டுச் சகித்துக்கொள்ளும், மண்டூகமல்ல நான்"

"மாவீரராகத்தான் இருங்களேன் ...அதனால் உம்முன் மண்டியிட வேண்டுமா என்ன! உமக்கு உம்முடைய மதம், எவ்வளவு ஆபாசம் நிரம்பியதாக இருப்பினும், மேலானது, என் தந்தையும அதே மதத்தில் நம்பிக்கை வைத்திருந்தவர் தானே; நவராத்திரி உற்சவ கைங்கரியம் யாருடையதாம்! நாலுகால் மண்டபம் யார் கட்டியது? எத்தனை கோயில்களுக்குக் காணிக்கை கொடுத்திருக்கிறார்.. இப்போது அவர் மனதில், இந்த மதம் மோசமான கொள்கைகள் கொண்டது, என்று தோன்றுகிறது. உடனே அவரைத் தொலைத்துவிடுவது தான், உங்கள் தர்மமோ? என்னைக் காதலித்து வந்திரா அல்லது என் தந்தையின் பேழையைக் காதலித்து வந்தீரா? என்றுகூடத் தான், எனக்கே இப்போது சந்தேகம் ஏற்படுகிறது.

"ச்சீ! துஷ்டை! துராத்மா! விலகிச் செல்!"

இவ்விதம் ஊடல், மோதுதலாகவே மாறலாயிற்று.

பூபதியார், நாளுக்குநாள் அமைதியை அதிகமாக மேற்கொண்டவரானார், பக்தமத ஏடுகளைப் படிப்பதும்—ரசிப்பதும்—பொருள் விளங்காதபோதெல்லாம் நலந்தாசென்று பாடம் பெறுவதுமாகவே காலங் கழித்து வந்தார்—வாணிபம் அறவே நின்றுவிட்டது.

"நேற்றுவரை, இவரிடம் கணக்கு எழுதிவந்தவன் இன்னும் சில ஆண்டுகளிலே கோடீஸ்வரனாகப் போகிறான்"—என்று கூறி வருந்தினான் பிரசாதன்.

"தந்தையின் செல்வம் போய்விட்டால், என் இளமையும் அழகும் கூடவே போய்விடாது" என்றாள் மல்லிகா.

"அது ஏன் போகும்! என்னை மயக்க அது இருந்துகொண்டு தான் இருக்கும்" என்றான் பிரசாதன்.

"நான் மயக்குபவளா? '

"அதிலென்ன சந்தேகம்?"

"அப்படிப்பட்டவளிடம் உமக்கு ஏன் பாசம்—நேசம்?"

"பாழும் மனம் கேட்காததால்..."

"படுகுழி என்று தெரிந்து ஏன் விழவேண்டுமோ? '

"காதலுக்குக் கண் ஏது?"

"காதகனைக் கண்டறிய எனக்குக் கண் இருக்கிறது. இனி என்னைச் சந்திக்க, இந்தப் பொழிலுக்கு வரவேண்டாம்"

"சந்திக்கவேண்டாம் என்று சொல்லு—பொழிலுக்கு வரவேண்டாமென்று சொல்ல நீ யார்?"

பொழிலுக்குப் போவதை வாசமல்லிகா நிறுத்திக்கொண்டாள்.

*

**பராசர** ஸ்வாமிகள் அடிக்கடி வந்துபோன வண்ணமிருந்தார்; ரங்கராஜ பண்டிதர் யாரிடமும் அதிகம் பேசுவதில்லை; ஏதோ தீவிரமான சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார். மாதங்கள் உருண்டோடின. காதல் முறிந்தேவிட்டது என்று ஊரார் பேசிக்கொண்டனர். உகுத்திடும் கண்ணீர், வெளியே தெரியக் கூடாது என்பதற்காக வாசமல்லிகா வெகு பாடுபட்டு வந்தாள். ஆனால், அதற்குள், இவைகளைக் கவனிக்கும் நிலையைக்கூடப் பூபதியார் தாண்டிவிட்டார்; நலந்தாவுக்கு நாள் தவருமல் ஏதையாவது 'நன்கொடை'யாகத் தருவார்; வாசமல்லிகா முகம்கூடக் கோணுவதில்லை.

"மல்லிகா! நமது தொழுவத்தில் இருக்கிற பசுக்கள—அதிகம்—அல்லவா?"

"ஆமப்பா......"

"நலந்தாவுக்கு......?"

"அனுப்புங்களேன்......அங்கு உள்ளவர்களுக்கும் பயன்படும்..."

*

"**அம்மா,** மல்லிகா! மகர கண்டியை விற்றுப் பணமாக்கிவிட்டேன்; நீதான் அதை இப்போதெல்லாம் அணிந்து கொள்வதில்லையே"

"ஆமப்பா, எனக்கு அம்மாதிரி நகைகள் பிடிக்கவில்லை"

"அப்படியா மகளே! குணவதியல்லவா நீ! பணத்தை......"

"நலந்தாவுக்கு அனுப்பிவிடுங்களப்பா..."

"அனுப்பிவிட்டதைச் சொல்லத் தான் வந்தேன், கண்ணே!"

*

"**அப்பா,** குளிர் காலத்தில் காஷ்மீர் கம்பளம், நல்லதல்லவா?"

"ஆமாம், மகளே! உன்னிடம் ஒரு உயர்தரமான கம்பளம் உண்டே?"

"எனக்கல்லப்பா? எனக்கென்ன —வாலிபம்தானே! சதா சிந்தனையில் மூழ்கியிருக்கும், நலந்தா நல்லவர்களுக்கு குளிரால், பாபம், எவ்வளவு கஷ்டமோ..."

"என்னம்மா, செய்வது? கொடியவனெல்லாம் கோட்டையிலும், அரண்மனையிலும் தங்கி, கோடையில் பூங்காற்றும், குளிர்காலத்தில் வெப்ப வசதியும் தேடிக்கொள்ள முடிகிறது. அவர்கள் என்ன செய்வார்கள் பாபம், ஆண்டிகள் தானே!"

"அதனால்தான், ஐயாயிரம் காஷ்மீர் சால்வைகளை வரவழைக்க ஏற்பாடு செய்துவிட்டேன்"

"அருமைமகளே, என்னமேலான எண்ணம் உனக்கு"

*

**இவ்விதம்,** தந்தையுடன் போட்டியிட்டுக்கொண்டு வளர்ந்துவிட்டாள் மல்லிகா.

ஆண்டுமூன்றாயிற்று; எந்த ஆரணங்கும், ராமப்பிரசாதன் கண்வழி நுழைந்து நெஞ்சில் பதியவில்லை- அவனுடைய செவியில், எத்தனையோ சீமாட்டிகளைப்பற்றிப் போட்டுவைத்தார், பண்டிதர்; பலன் இல்லை. எல்லாவற்றையும் இழந்துவிட்ட நிலையில் இருந்தான் பிரசாதன்; ஆனால் தன் தகப்பனாரை, மல்லிகாவே துச்சமாக மதிக்கிறாள் என்று எண்ணிக்கொண்டதால் ஏற்பட்ட ஆத்திரம் மட்டும் அடங்கவில்லை. மல்லிகா இல்லாத நேரத்திலெல்லாம், மலர்வனம்செல்வான், அவளை எண்ணிக்கொள்வான்; அவளுக்காக ஏறிக் கனிபறித்த மரங்களைக் கட்டித் தழுவிக்கொள்வான்; அவள் பொருட்டு பயிரிட்ட மலர்ச்செடிகளுக்குக் கண்ணீரை ஊற்றுவான்—பித்தம் பிடித்தவன்போலானான்.

"பிரசாதா! நாம் இருவருமே பெருந்தவறு செய்துவிட்டோம்..." என்கிறார் பண்டிதர் ஒருநாள்.

ராமப்பிரசாதன் திகைத்துப் போனான்.

அந்தப்பெண்ணை நேற்று பார்த் "தேன்—எலும்புந் தோலுமாக இருக்கிறாள்" என்றார்.

"ஆமப்பா! அதனால்தான் அவர்கள் ஆறு கிராமத்துக்குச் சொந்தக்காரர்கள் என்று தெரிந்தும், நான் அந்த சம்மந்தம் வேண்டாம் வேண்டாம் என்று கூறினேன்"

"ஓஹோ! நான் ஒயிலூர் சீமான் மகளைப்பற்றிச் சொல்வதாக எண்ணிக்கொண்டாயோ! நான் பாபம், வாசமல்லிகாவைப்பற்றி அல்லவா கூறுகிறேன். உன் நினைவே அவளைச் சித்திரவதை செய்கிறது. நீ மட்டுமென்ன—துரும்பாகிவிட்டாய். நான் ஏன் இந்தப் பாபத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஸ்வாமிகளும், காதலருக்குத் தடையாக இருப்பது எல்லாப் பாபத்திலும் கொடியது என்கிறார். ஆகையால்...''

"ஆகையால்...என்னப்பா?"

"நாளைக்கே சென்று பூபதியாரிடம், குழந்தைகளின் மனோபீஷ்டம் நிறைவேறட்டும் என்று கூறிவிடப் போகிறேன்."

"அப்பா..."

*

"அன்பே!
ஆருயிரே!
எனக்குத்தெரியும்
எத்தனை நாட்கள்?
எங்கே ஒளிந்திருந்தது இந்தக் காதல்?
நீண்ட காலத்துக்குப் பிறகு
இந்தக் கனிரசம்?"

இவை மீண்டும்! மீண்டும் மலர்ச்சோலையில் மணம், நீரோடையில் சிரிப்பொலி, மாலை வேளைகளில் மதுரகீதம் களிநடம் புரியலாயிற்று. மதகு திறந்ததும் பாய்ந்தோடும் வெள்ளம்போல் காதல் பெருக்கெடுத்தது!

*

"**மகிழ்ச்சி,** மகளே! அவரும் அறிவாளி; அவனும் பண்பாளன். ஏதோ இடையில் சிறிதுகாலம் அவர்களுக்கு ஒருவகைக் கசப்பு இருந்தது. உன் தூய்மையான காதல் வெற்றி பெற்றுவிட்டது. இனி, எனக்கு நிம்மதிதான்" என்றார் பூபதியார்.

"இதற்குள் நிம்மதி எப்படி அப்பா ஏற்பட்டுவிடும். பதினாயிரம் தூண்களும், தயாராக வேண்டாமோ?" என்று மல்லிகா கேட்டாள்.

நலந்தாவுக்குப் புதுக்கூடம் அமைக்கும் பணியில், அப்போது பூபதியார் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். பதினாயிரம் செம்மரத் தூண்கள் சித்திர வேலைப்பாடுடன் தயாராகிக்கொண்டிருந்தன. அவைகளைச் செய்வதிலேயே மகிழ்ச்சி ஊற்றெடுத்தது பூபதியாருக்கு; பண்டிதர் பகையை நீக்கிக்கொண்டது மேலும் மகிழ்ச்சி அளித்தது.

பண்டிதர் அடிக்கடி சென்று, செம்மரத் தூண்களின் அழகினைக் காண்பார்!

நிலவொளியில் பார்க்கும்போது நேத்திரானந்தமாக இருக்கிறது என்பார்.

பூபதியாருக்கு, பண்டிதர் மேலான குணம் கொண்டார் என்பதால், பூரிப்பு; பெருமையுங்கூட.

செம்மரத் தூண்கள் நலந்தா போய்ச் சேர்ந்துவிட்டன! அவைகளை அமைப்பதற்கான, சிற்பிகள் புறப்பட்டனர். தன் 'சேவை'யின் பூர்த்தியை எண்ணி, பூபதியார் களிப்புற்றிருந்தார்.

"செம்மரச் சிங்காரக்கூடம் அமைந்து, அதிலே 'சீலம்' குறித்து, சிறப்புரை நிகழ்ந்தானதும் திருமணம் — என்று கூறப்பட்டதால், ஒவ்வொரு தூண் முடிவதும், உள்ளத்துக்கு மகிழ்ச்சியூட்டிற்று, காதலருக்கு.


*

"**நாளையோடு** தீர்ந்தது, நாசகாலர்கள் ஒழிவார்கள்......"

பிரசாதன், இந்தப் பேச்சுக் கேட்டதும், திடுக்கிட்டுப் போனான். ஸ்வாமிகள் அல்லவா, பேசுகிறார்! உற்றுக் கேட்டிடலானான்.

'ரங்கராஜா! நீ, ஆரிய மார்க்கத்துக்குச் செய்துள்ள சேவை, மகத்தானது. மனு மாந்தாதா காலத்திலே ஆரியம் செழித்தது—இப்போது அழிய இருந்த ஆரிய மார்க்கத்தைக் காப்பாற்றும் பெரும் பாக்கியம் உன்னைச் சேர்ந்தது. உத்தமனே! உன்னை நண்பனாக அடையப்பெற்றநானேபாக்கியசாலி'

"என்னால் என்ன ஸ்வாமி! எல்லாம் தாங்கள் காட்டிய வழி நடந்



நலந்தா நோக்கி........

தேன்; இட்ட கட்டளையை நிறைவேற்றினேன். என்னால் என்ன சர்திக்க முடியும்”

“உன்னால் என்ன சாதிக்கமுடியும் என்றா கேட்கிறாய்? நலந்தா வெந்து சாம்பலாகப் போகிறதே, நாளைக்கு, யாரால்? உன் கைங்கரியமல்லவா இது? தூள் தூளாகப் போகிறது, அவர்கள் கட்டிவைத்துள்ள மாடங்களும், கூடங்களும்! நலந்தாவிலே கிளம்பப்போகும் ‘ஜ்வாலை’ நெடுந்தொலைவு தெரியும் —நெடுந் தொலைவு கற்கள் பிளந்து நாலா பக்கமும் பறக்கும், கட்டிடங்கள் சடசடெனச் சரியும்......”

“ஸ்வாமி அந்தப் புத்தப் பண்டாரங்கள்......”

“அவர்களா! ஆரியத்தை அழித் தொழிக்க முனைந்த அந்த அசுரர்களா! கட்டிடத்தின் அடியிலே சிக்குண்டு சிலர், நெருப்பிலே பலர், இடிபாட்டுக்கடியிலே சிலர், இப்படிச்செத்துத் தொலைவார்கள். பிணக் குவியல்! நலந்தா, புத்த மதத்தாரின் பாசறை என்றார்களே—சுடுகாடு ஆகப்போகிறது, நாளைக்கு! உத்தமனே! எல்லாச் செம்மரத் தூண்களிலும் நான் கொடுத்த ‘பொடி’ சேர்த்துவிட்டாயல்லவா, தவறாமல்”

“ஒவ்வொன்றிலும்— தாங்கள் சொன்ன அளவு! ஒவ்வொரு நாளும் அடிமடி நிறையக் கட்டிக் கொண்டு போயல்லவா, தூண்களிலே துவாரத்தில் தூவிவிட்டு வந்தேன்”

“அவனுக்குத் துளியும் சந்தேகம் எழவில்லையே...”



இரத்தச் சேற்றில் வாசமல்லிகா......

“ஏமாளிதானே! என் மகன், வாசமல்லிகாவுடன் காதல் நாடகமாடினானே, அதைக் கண்டே நம்பி விட்டான்.”

“ராமப்பிரசாதன் அறிவானோ?”

“இல்லை, ஸ்வாமிகளே! சிறுவன், மேலும் இளகிய மனம்! இந்தக் காரியத்தை அவன், சதி, சண்டாளத்தனம், கொலைபாதகம் என்று எண்ணிக்கொள்வான். என் சொல்லையும் மீறுவான். நமது இரகசிய ஏற்பாடு அவனுக்குத் துளியும் தெரியாது......... அப்படி நடந்துகொண்டேன்...”

“ஒரு மண்டலாதிபதிக்கு இருக்க வேண்டிய மதிநுட்பம் உனக்கு இருக்கிறது ரங்காராஜா! உம்! இருக்கட்டும், நீயே ஒரு மண்டலாதிபதியாக முடியாதா என்ன? ஐயன், நீ செய்துள்ள சேவைக்கு, அருள் பாலித்தாக வேண்டுமே...’

“ஸ்வாமி! யாககுண்டத்துநெருப்பு, செம்மரத் தூண்களிலே பாய்ந்து, செம்மரத் தூண்களிலே உள்ள ‘அரக்குப் பொடி’யினால் நாசம் வெள்ளம்போலப் பாயும்...அதிலே ஏதும் தங்கு தடையிராதே...?”

“ஒரு துளியும் இல்லை. நிச்சயமாக, நாளையதினம் நலந்தா சர்வநாசத்தில் சிக்கப்போகிறது, அதனாலேயே, நானும், மற்றும் சில ஆரியோத்தமர்களும் வெளியேறி விட்டோம்.”

பாவிகளா! என்று தன்னையும் மீறிக் கூச்சலிட்டுவிட்டான், ராமப்பிரசாதன்

மல்லிகா! மல்லிகா! — என்று அலறினான் — ஓடினான் — நிசப்தமாய் இருந்த வீதிகளின் வழியே அவன்.

**நலந்தாவுக்குத் தீ வைக்கிறார்கள்!**

**நலந்தாவுக்குநாசம் விளைவிக்கிறார்கள்!**

**நாளையதினம் நலந்தாவில் படுகொலை!**

**வாசமல்லிகா!**
**வாசமல்லிகா!**
**நலந்தா!**
**நலந்தா!**


கதறுகிறான் ராமப்பிரசாதன், மக்கள் நடுநிசிக் கூச்சல் கேட்டுப் பதைத்தெழுந்துவந்தனர்.

வாசமல்லிகா, மாளிகையில் இல்லை! தந்தையுடன், நலந்தா புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கிறாள், என்று காவலாளி சொன்னான். ஐயோ! என்று பயங்கரமான கூச்சலுடன், ஓடினான், அவர்கள் சென்ற திக்குநோக்கி.

விரட்டிக்கொண்டோடினர், பண்டிதரும் ஸ்வாமிகளும்.

விடாதே, பிடி! விடாதே, பிடி! என்று கூவினர்.

சிலர் பிடிக்க முயற்சித்தபோது, ராமப்பிரசாதன், பாதையில் கிடந்த பெருங்கற்களை அவர்கள்மீது வீசினான்—பற்களை நறநறவெனக் கடித்தான்—தொட்டால் பிணமாவீர்கள்! பாவிகளே! அங்கே, அறிவாளர்



அமலி-முண்டது

கள், அறநெறி அறிந்தோர், புத்தனின் பொன்மொழியை உலகுக்கு அளிக்கும் உத்தமர்கள் படுகொலை செய்யப்படச் சதி நடந்துவிட்டது; நலந்தாவுக்குத் தீ மூட்டப் போகிறார்கள். உடனே தடுத்தாக வேண்டும்— தொடாதே — கிட்டே வராதே — என்று கூவியபடி ஓடினான். தடுக்கவந்தான் ஓர் குதிரை வீரன் — அவனைக் குப்புறக் கீழே தள்ளிவிட்டான் — குதிரைமீதமர்ந்தான்—சிட்டாகப் பறந்தது பரி.

நலந்தாவுக்குப் போகும் பாதை.

அந்த அறிவாலயம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார், பூபதியார், மகளுடன்; நாலு மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில்.

அதோ, தெரிகிறது, தொலைவில் —குதிரையின் குடல் அறுந்துவிடும் வேகத்தில் செலுத்துகிறான்.

**மல்லிகா! மல்லிகா!**

வண்டியில், பாதித் தூக்கத்தில் இருந்த மல்லிகாவுக்கு, இன்பக் கனவுபோலிருக்கிறது, அந்தக் குரலொலி.

பூபதியார் வண்டியை நிறுத்தச் சொன்னார்; கீழே இறங்கி நின்றார்; வாச மல்லிகா விழித்துக் கொண்டு கொள்ளைக்காரனோ என்று பயத்துடன் பார்த்தாள்.

குதிரை நின்றது; கடிவாளம்—அறுந்தது.

"ஐயனே! என்னை மன்னித்தருளும்" என்று பூபதியார் பாதத்தில் வீழ்ந்தான் ராமப்பிரசாதன்.

"என்ன இது? மகனே எழுந்திரு"

"ஐயோ! நலந்தாவுக்குத் தீ மூட்ட, சதி நடந்திருக்கிறது. சதிகாரன் என்னைப் பெற்ற மாபாவி! சடைமுடி தரித்த சண்டாளனுக்குத் துணை—உடந்தை"

"நலந்தாவுக்கு தீ? என்ன ராமப்பிரசாத்! மனமருட்சியில் பேசுகிறாயா?"


"இல்லை ஐயனே, இல்லை; ஆரிய வஞ்சகர்கள், அந்த அறிவாலயத்தை அழித்துவிடவும், அதிலுள்ள புத்த சாதுக்களைச் சாகடிக்கவும், நாளைய தினம், நலந்தாவைக் கொளுத்திவிடச் சதி செய்துவிட்டார்கள். நீங்கள் அனுப்பியிருக்கிற செம்மரத் தூண்களிலே இந்த அழிவுக்கான அரக்குப்பொடி அடைக்கப்பட்டிருக்கிறது"

பூபதியார் பதைத்தார்—தலைதலை என்று அடித்துக்கொண்டார்.

வண்டி கிளம்பிற்று, நலந்தாவை நோக்கி. மாடுகளுக்குத் தெரியுமா, நடைபெறப்போகும் 'நீசத்தனம் இப்படிப்பட்டது என்று.

குதிரை வீரர்கள் பத்துப்பேர், 'ஸ்வாமிகளின்' ஆட்கள், வந்து கொண்டிருந்தனர், ராமப்பிரசாதனைப் பிடித்திட.

மாட்டு வண்டிக்கும் குதிரைகளுக்கும் போட்டி, முடிவு என்னவாகியிருக்க முடியும்?



தீயோர் மூட்டிய தீ

வண்டியைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

"ராமப்பிரசாத், நான் இவர்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறேன் — வண்டிக்காரனும் துணை இருக்கிறான்—நீ, மல்லிகாவுடன்..." என்றார் பூபதியார்.

"இந்தக் கொலைபாதகர்களிடம் தாங்கள் சிக்கிக்கொள்வதைப் பார்த்த பிறகா..." என்றான் பிரசாத்.

"அங்கே, நலந்தாவில், ஆயிரக்கணக்கானவர்கள், தம்பி, அவர்கள் நாட்டுக்கு, உலகுக்கு, மனித குலத்துக்கு ஆற்றவேண்டிய தொண்டு, மிகத் தேவையானது.........எனக்கென்ன இன்னும் வாழ்வு..."

"ஐயனே, ஐயனே."

*

"கீழே இறங்குங்கள் மரியாதையாக...உயிர்தப்ப வேண்டுமானால்" என்று கொக்கரித்தனர் முரடர்கள்.

கைகலப்பு மூண்டுவிட்டது—வாட்கள் சுழன்றன — தடிகள் நொறுங்கின—மாடுகள் மிரண்டன—வண்டி உருண்டது — சக்கரத்தில் சிக்குண்ட மல்லிகா, கதறக்கூட இல்லை.

எதிர்ப்புறமிருந்து, பெரிய நெருப்பு ஜ்வாலை, பார்த்தார், பூபதியார்—ஐயோ, என்னாலே, என் ஏமாளித்தனத்தாலே ஏற்பட்டதே பெரும் அழிவு, என்று கதறினார்.

காதுகளைப் பிய்த்துக்கொண்டு போகும் சத்தம்—ஜ்வாலை மேலே மேலே எழும்பிற்று. நலந்தா நாசமாகிக் கொண்டிருக்கிறது- இங்கே மூவரும், குற்றுயிராகக் கிடக்கின்றனர்.

*

"பஸ்பமாகிவிட்டதா, ஒழிந்தார்கள், நலந்தா அழிந்தபிறகு இதுகளுக்கு நாதி ஏது" என்று கோரச் சிரிப்புடன் கூவினார் ஸ்வாமிகள்.

"தங்கள் மகன்..." என்று கூறிக் கண்ணீர்சிந்தினான்யாரோ ஒருவன்.

"ஆரிய மார்க்கம் பிழைத்தது; பண்டிதரே, உம்மாலே, நலந்தா அழிந்தது. மலைமலையாகக் குவித்து வைத்திருந்த ஏடுகள் பிடி சாம்பலாகி இருக்கும். எந்த மன்றத்தில் அமர்ந்து அவர்கள் தமது மார்க்கத்தைப் போதித்து வந்தனரோ, அங்கேயே, பிணம்—பிணமா—வெந்து கருகிச் சாம்பலாயினர்', என்று பேய்ச் சிரிப்புடன் கூவினார் ஸ்வாமிகள்.

"என் மகன் இறந்துவிட்டானும், சுவாமி' என்றுகதறினார் பண்டிதர்.

"பகவத் சங்கற்பம், பண்டிதரே, பதினாயிரம் வராகன் உமக்கு முதல் தவணையாகத் தருகிறேன்" என்றான் கன்னெஞ்சக்காரன்.

"பாவி" என்று பண்டிதர் பதைத்துக் கதறிக்கொண்டே, ஸ்வாமிகளைத் தாக்கினார்.

"மகன் இறந்தானும்—இவனுக்கு அதனால் மனக்குழப்பம்—பிடித்துக் கட்டிப்போடுங்கள்" என்று கட்டளை பிறப்பித்தான் காதகன். ★

தொடர் சித்திரம்

# அறுவடை

5

ஓடிய கதை:—

[பிரெஞ்சுப் புரட்சியிலீடுபட்டு வெற்றி கண்டோர் விவேகப் பாதையை மறந்து வெறிப்பாதையில் உழன்றநேரம்...இராணுவ வீரன் விடால் என்பவரின் மனைவி அங்கெல், வெறியர்களால் விரட்டப்பட்ட சிராக் எனும் பிரபுவுக்கு அடைக்கலம் தருகிறாள். பிரெஞ்சு அசெம்பிளி முன், ஒரு வியாபாரக் கோமானின் ஊழலைவெளிப்படுத்தச்சென்ற விடால், ஜெஸ்டு எனும் சுயநலக்காரனால் விரட்டப்படுகிறான் வெளியே, உண்மை வீரன் விடால், உயிர்க்கே ஆபத்து வரும் என்பதை அறிந்த டாண்டன் என்பார், அவனை எச்சரித்து பாரீசை விட்டு வெளியேறும் அனுமதிச் சீட்டையும் தந்து அனுப்புகிறார். சீட்டுடன் வீட்டுக்கு வந்த விடால், "உடன் வருக, அவசரம்" என்று அதே டாண்டனிடமிருந்து வந்த அவசர ஓலையைக் கண்டு, செல்கிறான். அவன் வைத்துவிட்டுப் போன அனுமதிச் சீட்டை கைப்பற்றிக் கொண்ட சிராக்பிரபு, தன் மனதில் ஆண்டு பத்தாக நிழலோடிக்கொண்டிருந்த அங்கெலைக் கட்டாயப்படுத்தி, வெளியில் வந்து நின்ற 'கோச்'சில் ஏற்றிக்கொண்டு கிளம்பி விடுகிறான், ஊர் எல்லை தாண்டுவதற்குள், துரோகியிடமிருந்து அனுமதிச் சீட்டைக் கைப்பற்றிவிடலாம் என்கிற நம்பிக்கை ஒரு பக்கம்! நடுக்கம் இன்னொருபக்கம் அங்கெலுக்கு!! இந்நிலையில் வண்டி புறப்படுகிறது...]

★

குதிரை எழுப்பிய குளம்படிச் சப்தம் கூடத் தோற்றுவிடும்—அவ்வளவு வேகமாக அடித்துக்கொண்டது அங்கெலுடைய மனம். கடகடவென்றோடிய வண்டிச் சக்கரங்கள் தன்னை அதள பாதாளத்துக்கு இழுத்துச் செல்லுவதாக எண்ணலானாள். வண்டிக்காரன், சவுக்கால் குதிரையைத் தட்டும்போதெல்லாம், "கடமை தவறியவளடி, நீ! கடமை தவறியவள்!!" என்று தன்மீது வீசுவதற்குப் பதிலாக அந்த வாயில்லாப் பிராணியை வதைப்பதாகவே தோன்றிற்று அவளுக்கு.

"இனி என்ன செய்யப்போகிறேன்? முதலையும் மூர்க்கனும் கொண்டதை விடார்களே! சிராக், மூர்க்கன் மட்டுமல்ல—சாகசமாக சதித்திட்டம் தீட்டுவதில் வல்லவனான சண்டாளனாகத் தெரிகிறதே.........அழிந்துபோய்விட்டது என் வாழ்வு! ஒழிந்துபோய்விட்டேன் நான்!! இத்தனை நாளும், யாருடைய உள்ளத்துக்கும் உடலுக்கும் அடிமையாகயிருப்பதில் ஆனந்தமடைந்தேனோ, அந்த ஆனந்தம் அஸ்தமிக்கப்போகிறது. இரக்கமற்றவன், என்னை விழுங்கப்போகிறான்... விருந்தாக்கிக் கொள்ளப்போகிறான் ......ஐயோ! என்ன முட்டாள்தனம் செய்துவிட்டோம்!!"

"சரி! வந்ததுவரட்டும்-ஓடும் வண்டியின் கதவுகளைத் திறந்துகொண்டு வீதியில் குதித்து விடுவோம்"

"கதவுகளைத் திறக்க முயற்சித்தால், கைத் துப்பாக்கியால் சுட்டு விடுவானே?"

"சுடட்டும்! சுட்டுத் தள்ளட்டும்!! மிகவும் நல்லது. வாழ்நாள் முழுதும் அனுபவிக்க வேண்டிய தொல்லைகளிலிருந்து ஒரு விநாடியில் விடுதலை பெற்றுவிடலாம்!"

"எனக்குற்ற கதியைப்பற்றி, உத்தமரான என் கணவர் அறிந்தால் என்ன நினைப்பார் என்னைப் பற்றி?"

"ஐயோ!......"

## அரங்கண்ணல்

அவளால், அதற்குமேல், நினைக்க முடியவில்லை. விடால், தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கை—விரோதி என்று தெரிந்தும், தான் சொன்னதற்காக இந்தக் கொடுங்கோலனுக்கு வாழ்வளிக்க முன்வந்த, அவனுடைய பெருந்தன்மை—யாவும், அவளுடைய மனக்கண்முன்னால் தெரிந்தது. அவளால், அந்த நினைவுகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஓடும் வண்டியிலிருந்து குதித்து உயிரை விடுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் தெரியவில்லை! உத்தமி, அந்த முடிவுக்கு வந்து, தயாராகிவிட்டாள்!!

அதே சமயத்தில், உள்ளே அமர்ந்திருந்த சிராக் பிரபு, அவளுடைய தோளின்மீது கரத்தைப் போட்டான்... உடல் சிலிர்த்தது, அவளுக்கு. "சீ! எடு கையை!!", என்று சொல்ல, எண்ணினாள். உடனே, அவளுடைய மனம் சொல்லிற்று, "இவ்வளவு நேரம் சாகசப் பதுமையாக இருந்த நீ, இன்னும் கொஞ்சநேரம் உள்ளத்தைத் திடமாக்கிக்கொள். பாரிஸ் பட்டணத்தின் எல்லையைத் தாண்டும் வரையில், பார். கடைசி நிமிஷம் வரையில், முயற்சியைக் கைவிடாதே. அப்படியும் முடியவில்லை என்றால், இருக்கவேயிருக்கிறது, சாவு! தைரியத்தைக் கைவிட்டு விடாதே!!", என்று. அதனால், தோள்மீது விழுந்தஅவனுடைய கரத்தை. மெதுவாக எடுத்து வைத்தாள்.

"தேடக்கிடைக்காத திரவியம், நீ அங்கெல்!"

"அப்படியா?"

"சூட முடியுமோ, உன்னை! என்னைச் சுட்டெரிக்கும் காதல் தீக்கு மாமருந்தாவாயோ, நீ?—என்று எத்தனை இரவுகள், ஏங்கியிருக்கிறேன் தெரியுமா?"

"இப்போது...?"

"ஏக்கம்! தூக்கம்!-எல்லாம் பறந்துவிட்டது. எனக்கு நீ! உனக்கு நான்!"

ஆர்வத்தோடு, அவளைப் பிடித்திழுத்து அணைத்தான். மூடப்பட்டிருந்த கோச்சுக்குள்தான் எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்கிற துணிவேற்பட்டது, அந்தக் கயவனுக்கு. சாதுர்யமாக, அவன் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டாள், அவள்.

"அங்கெல்! அவனன்றி ஓரணுவும் அசையாது என்கிறார்களே? எவ்வளவு உண்மை தெரியுமா அது! "ஆண்டவா எப்படியாவது என்னுடைய இதயவல்லியான அங்கெலை எனக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்" என்று இரவுபகலாக இந்தப் பத்து ஆண்டுகளும், வேண்டி வந்தேன். இறைவன், இன்றுதான் இரக்கம் வைத்து எனக்கு உன்னை வழங்கியிருக்கிறான்..."

"அப்படியா!"

"இல்லையென்றால், இப்போதோ இன்னுஞ் சற்று நேரத்திலோ—என்று உயிருக்கு மன்றாடி ஓடி ஒளிய இடம் தேடிய என்னை உன்னிடம் கொண்டு வந்து விட்டிருப்பானா; அப்படிக் கொண்டுவர்ந்துவிட்டதுமன்றி, இந்த அனுமதிச் சீட்டு என் கைக்கு கிடைக்கும்படிச் செய்திருப்பானா!......என்ன இருந்தாலும், ஈசன், தன்னுடைய பக்தர்களை எப்போதும் கைவிடுவதே கிடையாது"

"அப்படியென்றால், நீர், ஆண்டவனுடைய அத்யந்த பக்தர்போலிருக்கிறதே!"

"சந்தேகமா அதில்? அவன்மீது எனக்கு எவ்வளவு நம்பிக்கை உண்டு தெரியுமா!"

"சரி, வண்டியை நிறுத்தச் சொல்லும். உம்மோடு வர எனக்கு இஷ்டமில்லை"

அங்கெல் கூறிய இந்த வாசகங்களைக் கேட்ட சிராக், திகைத்தான்.

"என்ன அங்கெல்! என்ன சொல்லுகிறாய், நீ?"

"உண்மையாகத்தான் சொல்லுகிறேன்; எனக்கு உம்மோடு வர இஷ்டமில்லை..."

"நீயா இப்படிச் சொல்லுகிறாய்...... அறையில், ஆசைகொண்டவள்போல அள்ளி வீசினாயே சொற்களை, அந்த அங்கெலா இப்படிச் சொல்லுகிறாய்..."

"ஆமாம்! ஆண்டவன கிருபையால் அனைத்தும் கிடைத்தது என்றீரே—இந்த அங்கெல் சம்மதிக்காவிடில், உம்மால் அழைத்துப்போக முடியுமோ, என்னை?" என்று கேட்டபடி, அவனை நோக்கித் தன்னுடைய பார்வையை வீசினாள். இந்தச் சங்கடமான நேரத்திலும், சாமர்த்தியமாக நடிக்கும் ஆற்றல் வந்தது குறித்து, அவளுக்கே பிரமிப்பாயிருந்தது. இப்படித்தான் சந்தர்ப்பம் சில வேளைகளில் கோழையையும் வீரனாக்கிவிடும்போலும்!

அங்கெலின் பதில், அவனுக்குப் பேரானந்தம் அளித்தது.

"குறும்புத்தனம், உன் கூடப்பிறந்த சொத்துபோலிருக்கிறது அங்கெல்!" என்று குழையலானான்.

"கரும்பு என்று அடிக்கடி வர்ணிப்பார் விடால்"

"வர்ணித்தால் போதுமா! வாய் ஜாலமன்றி, சுவையேதும் அறியாத வீணன்......அங்கெல்! உன் அங்கத்தைத் தொட்டுப்பார்த்தால் அரும்பு போலிருக்கிறது.........உன் அருகே நெருங்க நெருங்க எறும்பாகி ஊர்ந்து செல்லவேண்டும் என்கிற ஆசை உதயமாகிறது......"

முகத்துக்கு அருகில் முகத்தைக் கொண்டுபோனான், அந்த மூர்க்கன். அவன் கண்களில் வீசிய மோகத் தீயைக் கண்ட அங்கெல் பதறிப் போனாள். இம்முறை, என்ன சாகசம் செய்தாலும், அவனிடமிருந்து தப்ப முடியாது. ஏனெனில், அவன் இது காறும், அடக்கிவைத்திருந்த ஆசை, உச்ச கட்டத்துக்கு வந்துவிட்டது. உதடுகளைக் கவ்வப்போகிறான்—முரட்டுக்கரங்களால் அவளை இறுக அணைக்கிறான்...இதோ, இதோ.

"ஆ" என்று அவள் அலறுவதற்கும், வேகமாக ஓடி வந்த வண்டி திடீரென நிற்பதற்கும் சரியாக இருந்தது. 'சட்'டென வண்டி நின்ற வேகத்தில், இருவரும் ஒரு முறை குலுங்கி எழுந்தனர்.

சிராக், திடுக்கிட்டவனாய், "என்ன?" என்றான் வண்டிக்காரனை நோக்கி.

வெளியில், சிலரின் பேச்சுக் குரல் கேட்பதை அறிந்தாள், அங்கெல். போன உயிர் திரும்பிவந்தது அவளுக்கு. வண்டிக்காரனுடன்: யாரோ பேசிக்கொண்டிருப்பது, சிராக்குக்கும் கேட்டது. ஏன் வண்டி நின்றது என்று அறிவதற்காக கதவுகளைத் திறந்துகொண்டு வெளியில் எட்டிப் பார்த்தான், சிராக். அங்கே, மூவர்ணக் கோடுகள் ஓடிய கருப்புத்தலைப் பாகையுடன் ஒருவன் நிற்பது தெரிந்தது. சிராக், கதவைத் திறந்ததும் அந்த ஆளுடைய கூரிய கண்கள் வண்டிக்குள் பாய்ந்தன. சிராக்கையும் திடுக்கிடவைத்தது, அந்தப் பார்வை.

(வளரும்)

---

6-ம் பக்கத் தொடர்ச்சி

போகுமுன் அன்னையின் பொருட்டுப் பணியாற்றிவிட்டேன்; ஆவி பிரிகிறது எனினும், கண்மூடுமுன், இக்காரியத்தைத் தொடர்ந்து நடாத்தி வெற்றி காணும் வீரர்குழாம் எனைச் சூழ நிற்கக் காண்கிறேன் — அக்காட்சி தீட்டிடும் புன்னகையுடனேயே, புகழ் பெற்று மறைகிறேன்—தமிழ்நாடு மறையாது-மறையாது-என்று கூறும் அளவுக்கு வீர உணர்ச்சி கொள்வீராக—என்றெல்லாம் எடுத்துக் கூறிக்கொண்டு அலைகிறார், வாள் பெற உலைக்கூடமெங்கணும் சென்று காணும் பான்மைபோல, அறப்போருக்கான அணிவகுப்பு அமைத்திட, வீரர் கோட்டமெலாம் வருகிறார். அவர்தம் வருகையின்போது வெற்றுரையும் வேண்டாம் விழாவும் கூடாது —வேலைத் திட்டம் தாருங்கள், பெறுங்கள்—நெடுஞ்சாலையோரமெல்லாம் நின்றிருந்து உரையாடுங்கள், கடும்போராயினும் கலங்கமாட்டோம் என்ற உறுதியினைத் தாருங்கள்; அமிர்தசரசில் ஆக்கப்பட்டு வரும் அக்ரமம், எந்த வடிவுடன் வந்தாலும், அதனை எதிர்த்தொழிக்காமுன்னம், ஊண் கொள்ளோம், உறக்கம் இல்லை என்று உறுதிகொள்ளுங்கள்.

ஆளைக் கொண்டுவருபவருக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு அளிக்கப்படும்—என்று இந்தியப் பேரரசு, நாகர் தலைவன் பிஜோ குறித்து, அவசர அறிக்கை வெளியிட்டிருக்கிறது; அந்தஉரிமைப் போர் வீரனுடைய சிரிப்பொலியை எதிரொலித்துக்கொண்டு குன்றும் மலையும், குணங்கெட்ட குடிலர்களின் கொற்றம் கொடுமை பல செய்கிறது, கொடுமை அதிகமாகவாக, அது அற்று வீழ்வது உறுதி என்று கூறுவதுபோல் நிமிர்ந்து நிற்கின்றன.

நமக்கும், அதுபோன்றதோர் 'கொடுமை'யினைத் தாங்கவேண்டிய கட்டம் பிறக்கக்கூடும்.

பிப்ரவரி 20 — ஒரு பெரும் பயிற்சி நாள்.

சர்வகட்சிக் கூட்டணியின் பின்னால் திரண்டுள்ள சக்தியினை அறிந்துள்ள சென்னை சர்க்கார், டில்லி, சிண்டு பிடித்திழுத்து மண்டை ஓட்டு மாலையைக்கொண்டு வந்து தந்தாக வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தாலொழிய, நம்மைத் தீண்டும் என்று கூறுவதற்கில்லை. தீண்டியவர் என்ன ஆனார் என்பது, அந்த நிலையிலேயே முதலமைச்சரானவருக்கா தெரியாமற்போகும்.

ஆனால் அதிகாரம், அகந்தையை அடிக்கடி ஈன்றெடுத்தளித்திடும் — அதன் வயப்பட்டோருக்கு முன்னாள் நிலைமைகளும் நினைப்புகளும்கூட மறந்துபோவதுண்டு.

எனவே எத்தகைய கொடுமைகள் இழைக்கப்பட்டாலும் தாங்கிக் கொள்ளும் தியாக உள்ளத்துடன் பணியிலே ஈடுபட வேண்டும். உனக்கென்ன, அறிவுக்கோ ஆற்றலுக்கோ பஞ்சமா! பழக்கமோ பயிற்சியோ இல்லையா, களம்பல கண்டவன்! வாகை உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது வழியிலே உள்ள முட்புதருக்காக அஞ்சி சிரித்திடும் முல்லையைப் பறித்திடாது திரும்பிடும் பேதையும் உளனோ.

தம்பி! உன்னைக் காணவரும் பொதுச்செயலாளரிடம் உறுதி கூறு

**பிப்ரவரி 20ல்**
**அமைதி கெடாது**
**பலாத்காரம் தலைகாட்டாது**
**கண்ணியம் கெடாது**
**கட்டுப்பாடு குலையாது**
**களங்கம் ஏற்படாது!**

என்று. உள்ள நாட்களோ குறைவு, மேற்கொண்டுள்ள பணியோ, மேலானது.

அன்பன்,

**அண்ணாத்துரை.**

# கவிதை அரங்கம்

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்ஸாண்டர் தன்னிடத்தில், உணர்ச்சி யோடு!
"அப்படியா அப்பெல்லஸ்!" என்று வேந்தன்,
அழகுச்சிலை கம்பாஸ்பி தன்னை ஈந்து,
"ஒப்பில்லா அழியாத ஓவியத்திற்
குறுபரிசாய், உயிர்நண்பா! கொள்க!" என்று
செப்பவேண்டும் இதுதான் எனது எண்ணம்
சேரட்டும் கலைக்கடலில் அழகு வெள்ளம்!

**பே. சா. தனராசு,**
நாமக்கல்.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்சாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சியோடு!
"அப்படியா? அப்பெல்லஸ்!" என்றான் வேந்தன்
அணைமீறிப் பாய்கின்ற வெள்ளம் ஆனான்!
"உப்பென்றாய் எனக்கு அவள்; ஆனால், நீயே
உணவாக்க எண்ணுகிறாய்; உந்தன் ஆவி
தப்பாது, ஒழிந்திட்டாய்! என்று வாளைச்
சாய்த்திட்டான் அப்பெல்லஸ் கழுத்தை நோக்கி!
இரத்தத்தை நீராக்கி கலைக்கூடத்தை
எழில்செய்த அப்பெல்லஸ் இரத்தத் தாலே
இரவுக்கு முன்னுள்ள வானம் போல,
இத்தீர்ப்பால் கலைக்கூடம் மாறிற்றந்தோ!
"சரியான தே!",என்றாள்; உயிரை உண்ணும்
சர்ப்பத்துக் கிணையாக நடித்த மங்கை!
உரத்தசிரிப் பொலிசெய்து, வேந்தர் வேந்தை
ஓராயி ரந்தடவை முத்த மிட்டாள்!

**செ. கிருஷ்ணசாமி,**
அரக்கோணம்.

★

"விரிகடலில் கலந்துவிட்ட நதியை நீல
விண்ணகத்தில் ஒன்றிவிட்ட நிலவை என்றும்
பிரித்துவிட முடிவதுண்டோ நண்பா! ஒளிப்
பிறையைப்போல் நுதலுடையாள் உன்றன் மீது
சரியாத மெய்யன்பு கொண்டா ளென்றால்
சந்தனமும் பன்னீரும் கலத்தல் போல
தரித்திடுக மணக்கோலம் என்றே மன்னன்
தனியன்பால் கூறுதலே தகைமை என்பேன்."

**உமர்,**
ஆரணி.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்ஸாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சி யோடு
"அப்படியா அப்பெல்லஸ்!" என்று வேந்தன்.........
அருகிருந்த கம்பாஸ்பி தன்னை நோக்கி
செக்கரேநீ! தடாகத்து தாமரை மேல்
செலுத்துவது காதலோ? என்று கேட்டான்
வளநாட்டுப் பேரமைச்சர் வடவர் முன்னால்
வாயடைத்து நிற்பதுபோல் அவளும் நின்றாள்
கொஞ்சுகுரல் சொல்லழகே! தென்றல் காற்றே!
குவலயத்தின் உயிர்மூச்சே! கிரேக்கர் பண்பே!
சீலத்தை வென்றவனை எதிர்த்த அந்த
சிங்காரப் பீடுநடை 'போரஸ்' போல
'அஞ்சாது' பேசிடுக; அலெக்ஸும் சொன்னான்
அனலாகி கம்பாஸபி; எந்தன் ஆவி
அகிலத்தின் பிணக்காட்டான் அலெக்ஸுக் கல்ல
அப்பெல்லஸ் ஓவியனின் உடமை என்றாள்.
தேயிலையை ஏலத்தை மலை வளத்தை
தேவிகுளம் தந்தாலும் பெரிது அல்ல
என்னுரிமை என்னுடு எல்லாம் விட்டு
ஏகவிந்தி யாகாப்பேன் என்று கூறும்
தமிழரிலே; தன்மனைவி சோரம் கேட்டும்
சகிக்காத உள்ளத்தார் போன்று மன்னன்
அப்பலஸே! அரசானன் கடமை செய்வேன்
ஆனாலும் உட்பொருளொன் றுண்டு என்றான்.
அதுகேட்டு உயிர்நண்பன் என்ன என்றான்
அவனிபுகழ் அலெக்ஸாண்டர் மனைவி கம்பாஸ்
ஆவிதனை ஓவியனின் உடமை செய்தாள்
அதுபோல நினைவிட்டு வேறு சென்றால்
அப்போது தாய்க்குலத்தின் மகிமை போகும்
ஆகையினால் அவள்தலையை கொய்தேன் இந்தா
அன்பளிப்பாய் பெற்றிடுக என்றான் வேந்தன்.
அப்பலெஸோ கண்களதால் மாரி பெய்தான்.

**செ. இராஜேந்திரன்,**
இலுப்பக்குடி.

★

அலெக்ஸாண்டர் கவிதைக்கு தோழர்கள் வழங்கும் முடிவுகள்.

# மாறுமா?

**"நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் பாதுகாப்பதே, சர்க்காரின் பெருங்கடமையாகும். அந்தப்பெருமைக்கு இழுக்குவர ஒருக்காலும் சம்மதியோம். யாரோ சில காலிகள்—போடும் கூச்சலுக்கு மிரண்டுவிடமாட்டோம். அவர்களுக்காக எங்களுடைய முடிவுகளை ஒருக்காலும் மாற்றிக்கொள்ள மாட்டோம்"**

"போலீசால், நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை......"

"அப்படியா ஆயுதப் படையை எதற்காக வைத்திருக்கிறோம்? அனுப்பு உடனே..."

"சாதாரண துப்பாக்கிகளால் சமாளிக்க முடியவில்லை, நிலைமையை......"

'சுடு! சுடு! கடைசித் தோட்டா இருக்கும் வரையில் சுடு"

வெண்மணற் காடு, இரத்தச் சமுத்திரமாகிறது; வீதியெல்லாம் பிணக்காடு! விழுகின்றனர், மக்கள் பிணமாக! பாலகன் உயிர் துறக்கிறான் பைங்கிளி விதவையாகிறாள். குடும்பத் தலைவனுக்குக் கோர மரணம். கொடுமை—கொடுமை எனும் கூக்குரல் எங்கும். குண்டுகள் மாரிபோலப் பொழிகின்றன. மனிதர்கள்—மரங்கள்—சுவர்கள், எங்கும் போய்ஊடுருவுகின்றன: தருக்களிலே, அந்த வடு-சுவர்களிலே குண்டுச் சின்னங்கள்!

* * *

"1919 ஏப்ரல் வைகாசி தினத்தன்று இந்திய தேசிய காங்கிரஸ் உத்தரவுப்படி ரௌலட் சட்டத்தை எதிர்க்க இத்தோட்டத்தில் இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லீம்கள் நடத்திய ஆட்சேப கூட்டத்தின் மீது பிரிட்டிஷ் ஜனரல் டையர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். இத்தோட்டத்தைச் சுற்றிலும் உள்ள சுவர்களிலும் துப்பாக்கித் தோட்டாக்களின் சின்னங்கள் உள்ளன. இந்தச் சின்னங்கள் கண்ணாடியால் மூடப்பட்டிருக்கின்றன. இந்த இடத்தில் அன்றைய தினம் 2000 பேரின் இரத்தம் ஓடிற்று," என்று அந்தப் படுகொலை நடந்த இடத்தில், 'நடுகல்' நாட்டியிருக்கிறார்களாம், பஞ்சாப் மாநிலத்தினர். காங்கிரஸ் மாநாட்டுக்கு வரும், அமைச்சர்கள், தலைவர்கள் அனைவரும் 'ஜாலியன்வாலா'வுக்கு வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

* * *

கோரக் கொலைகளைப் புரிந்த டையரை, பிரிட்டிஷ் பார்லிமெண்ட், 'ஏன், அப்படிச் செய்தாய்? என்று கேட்கவில்லை அன்று. மாறாக வீரப்பதக்கம் அளித்து கௌரவித்தது. சற்றேறக்குறைய 1956லும், அதே டயர் தான் வாழ்கிறான், இந்திய உபகண்டத்தில்; ஆனால் மாற்றுருவில். அவன் என்ன காரணம் சொல்லிச் சுட்டானோ அதே 'அமைதி சமாதானம்' ஆகியவைகளை பாதுகாப்பதற்கென்றே நாடு முழுதும் வேட்டுச் சப்தம் கேட்கிறது. பம்பாய்—ஒரிஸ்ஸா—கல்கத்தா—இப்படி எங்கும் துப்பாக்கி முழக்கம். இன்று இன்னொரு சேதி, வருகிறது! அஸ்ஸாமுக்கருகிலுள்ள நாகநாட்டு மக்கள் தனி நாடு கோருகின்றனரல்லவா? அவர்களது தலைவன் பிஜோவை வேட்டையாடிப் பிடிப்பதற்கென்று காடுகளை நோக்கி இராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறதாம். இராணுவம் — இன்று, சொந்த நாட்டு மக்கள் மீதே சுலபமாகத் திருப்பப்படுகிறது. யார்யார்! தமது இனத்தவரின் உரிமைகளுக்காகப் பாடுபட முன்வருகின்றனரோ—அவர்களுக்கு; நேருவின் ஆட்சி வழங்கும் பரிசு, சாவு! குண்டடி, குங்குமம் போகிறது—தாலிகள் அறுகின்றன!!

61 பவுன் பரிசு—61 நூறு ரூபாய் நோட்டு மாலை—ஆடம்பரப் பவனி, இவைகளை அளித்திருக்கிறார்கள், நாட்டை வேட்டைக் காடாக்கும் கட்சியினருக்கு, அவர்தம் பஞ்சாப்சீடகோடிகள். டையர் அன்று பரிசு பெற்றான். நேரு, இன்று பரிசு பெறுகிறார், தேபர் உருவில். டையருக்கு வெள்ளை அரசு வழங்கிற்று; இங்கே, காங்கிரஸ் கிளை அளிக்கிறது. ஆனால், மக்கள்...? ஆதிக்க முரசு கொட்டி அக்கிரமம் நடாத்திய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் படுகுழிக்கு அனுப்பினர். அந்தக் கதிதான் ஏற்படும் ஆதிக்கக்காரர்களுக்கு என்பதை நினைவூட்டும் 'ஜாலியன்வாலா' அதோ இருக்கிறது; தியாகபுரி; தீரச் சோலை. அதைக் காணும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள், அரசுத் தலைவர்கள்! அதைக் கண்ட பிறகாவது, 'கனம்'களின் மண்டைக் கனம், இறங்குமா? அல்லது, சீடகோடிகள் தரும் ஆடம்பரப் பவனியைக் கண்டு அகமகிழ்ந்து அதே ஆதிக்கப் பாதையில் செல்வார்களா? — என்று நாம் மட்டுமல்ல; நாடே கேட்குமளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.